Regd. No. M. 4900

16 பக்கங்கள்.

# குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 26-2-1949 சனிக்கிழமை } மலர் 25.

## அழித்தே மாள்வோம்!

★

[ "கருணா" ]

1. தென்திசையிற் பரந்திருந்த தேசமெல்லாம்
தீயகடல் கொண்டதனால் தேய்ந்து மாயச்,
செந்தமிழின் பண்டையநாள் ஏடு யாவும்
தீயிடையும், நீரிடையும் செலுத்தச் செய்து,
வந்தவர்கள் சொந்தமுடன் குடியுமானார்;
வாழ்வினிலே தமிழ்ப்பண்பை முற்றும் கொல்றார்.
சிந்தையெலாம் நஞ்சாக்கிச் சிதைத்து விட்டார்.
திராவிடரே, சீரழிந்த வாழ்வும் ஏனோ?

2. வெள்ளையனின் ஆட்சியிலே இரவிற் கொள்ளை,
வேதியனின் ஆட்சியிலோ பகலிற் கொள்ளை;
குள்ளநரி ஆளுகையில் ஆடுகட்குக்
குறைதீர வழியுண்டோ, நீதியுண்டோ?
எள்ளளவும் இனவுணர்ச்சி எவற்கு மில்லை;
எச்செயலும் புரிகின்றார் பதவிக் காகத்;
தள்ளுதலும் சுரண்டுதலும் தடுத்தி டாமல்
தூங்கிவிழும் திராவிடர்க்கு வாழ்வு வேறா?

3. அன்றொருநாள் அமெரிக்க ஆதி மக்கள்
அருஞ்சிவப்பு இந்தியரின் பூண்டு மின்றிக்
கொன்றொழித்துக் குவலயத்தார் வியந்து நிற்கக்
கோடி-கோடிப் பொருளுடனே குதூகலிக்கும்
இன்றையநாள் அமெரிக்கர் போல வாழ
இந்நாட்டில் ஆரியரை விடவே மாட்டோம்.
தென்றலுடன் அணுக்குண்டை வீசி, இந்தத்
தென்னாடு முழுமையுமே அழித்தே மாள்வோம்!

# கிராம தேவதைகள்!

நம் நாட்டுப் பழந்குடி மக்களான திராவிடர்கள் முன்பு மந்திரக்காரர்களிடமும், மந்திரக்கார மருத்துவச்சிகளிடமும் நம்பிக்கைவைத்திருந்தனர். பின்பு நாளடைவில் மக்களது அறிவு வளர ஆரம்பிக்கவே—சிந்தனையின் பொன்னொளி எங்கும் பரவ ஆரம்பிக்கவே இந்த அறியாமைச் செயல்கள் மாண்டு மடிந்துபோக ஆரம்பித்தன. இந்த விஷயத்தில் இப்போது திராவிடத்தில் பெரிய—மகத்தான மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லவேண்டும். ஆயினும் இன்னும் அறியாமையிலேயே உழன்று கிடக்கும் பாமர மக்கள்—முக்கியமாக கிராமங்களில் வாழும் மக்கள் தெய்வங்கள் அல்லது தேவதைகளின் கோபத்தினால்தான் நோய்கள் உண்டாகின்றன என, நம்பிவரும் காரணத்தால், தங்கள் கிராமத்தில் நோய் பிணிகள் வராமல் தடுப்பதற்காக, அந்தக் கிராமப் பொதுமக்கள் தங்களுக்கெனப் பொதுவாகக் கோவில்களைக் கட்டி, தங்களுக்கு விருப்பமான தேவதையின் உருவைச் செதுக்கிய கல்லை வைத்து வணங்கி வருகிறார்கள். கிராமப் பெண்டிர்கள் தங்கள் நோயுற்ற குழந்தைகளைத் தங்கள் ஊரிலுள்ள கோவிலுக்கு எடுத்துக்கொண்டுபோய்ச் சுற்றிவருதலை நாம் இன்றும் பார்க்கலாம்—இது நாட்டிலே இன்றும் நடைபெற்று வரும் நிகழ்ச்சி!

## முன்னாளில்

உபயோகப்படுத்தப்படாத கற்களை அல்லது நன்றாய் வேலைப்பாடு செய்யாத கற்களை எண்ணெய், மஞ்சள் குங்குமம் முதலியவற்றைத் தேய்த்து வணங்கினார்கள். நாளடைவில் நன்றாய் வேலைப்பாடு செய்த உருவங்களையும் வணங்கத் தொடங்கினர். இவற்றிற்குப் பூசைகள் நடப்பிக்க, முன்பு குயவர் குலத்துதித்தோரே பூசாரிகளாக இருக்கவேண்டுமென்ற நியதியிருந்தது. ஆனால் நாளடைவில் மக்களை ஏமாற்றி—தங்களை அத் தேவதைகளின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு பார்ப்பனர்கள் பூசாரிகளாயினர்.

யூதரும் அராபியரும் கிராம தேவகளை வழிபடும் வழக்கமுடையோராய் இருந்திருக்கிறார்கள். முகம்மதியருடைய மக்கத்துப் பள்ளிவாசலுக்குள் அவர்கள் ஆதிகாலந்தொட்டு வணங்கிவருகிற 'கபா' என்னும் கல்லைப்பற்றி யாவரும் அறிவார்கள். இந்த நாட்டிலே உள்ள மலைவாசிகளைப் போலவே அமெரிக்காவிலுள்ள இந்தியரெனப்படும் மிலேச்சரும் ஒரு கல்லை எடுத்துத் தங்கள் குடிசைக்கு அருகில் நட்டு, அதற்குத் தாங்கள் சாப்பிடும் உணவினையும் பான பதார்த்தங்களையும் புகையிலையையும் படைத்து வைத்து வணங்கி வருகிறார்களாம். தங்கள் நிலங்களில் நல்ல விளைச்சலைக் கொடுப்பதற்காகவும், மழையைக் கொடுக்கும்படியாயும், தங்கள் பெண்களுக்குச் சுகப் பிரசவத்தை அளிக்கும்படியாயும் வேண்டிக்கொண்டு அவைகளுக்கேற்றவாறு வெவ்வேறு கற்களை நட்டு வணங்கி வழிபடுவார்களாம்.

நம்முடைய நாட்டிலே தேவதைகளுக்கென உருவாக்கப்பட்டுச் செதுக்கப்பட்டுள்ள உருவங்களைப்பற்றி நாம் அனைவரும் அறிவோம் ஆதலால், அவற்றைப்பற்றி இங்கு விவரிக்க வேண்டியதில்லை. ஆயினும் ஒரு சிலவற்றைப்பற்றிக் கூறுகிறேன்.

## குட்டித் தேவதைகள்!

பெண்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்காக 'சஷ்டி' என்னும் ஒரு தேவதையை வழிபட்டு வருகிறார்கள். மரங்களின் வேரருகில் இந்தத்தேவதைகள் வாழ்ந்துவருகின்றனவாம்!

மோகினிப் பெண்ணுருத் தாங்கிய விஷ்ணுவோடு சிவன் கூடிப் பெற்ற ஹரிஹர புத்திரன்—அய்யனார்—முதலிய சில்லரைப் பிசாசுகள் தங்களிடம் வரவிடாமல் தடுக்கவும், கன்றுகாலிகளுக்கும், மாகுல்களுக்கும் நோய் வரவிடாமல் காப்பதற்காகவும் கிராம மக்கள் அவற்றை வணங்குவார்கள். ஊருக்கு வெளிப்புறத்தேயுள்ள தோப்பு, காடுகளிலுள்ள பெரிய மரங்களினடியில் சிறிய கோவில்களை எழுப்பி, அதில் அய்யனார் சிலையையும் அதனிரு பக்கத்திலும் அய்யனாருடைய மனைவிகளின் சிலையையும் வைத்திருப்பார்கள். அவர்களுக்கெதிரே வேட்டையாடவும் காவலுக்குப் போவதற்கும் குயவனால் செய்யப்பட்ட குதிரைகள், நாய்கள், படைவீரர்கள் முதலியவைகள் வைக்கப்பட்டிருக்கும். நாய் பிடிக்கும் பாய்ச்சல் கயிறு, செருப்பு, கம்பு, வேலாயுதங்கள் முறையே வைக்கப்பட்டிருக்கும். காணிக்கை போட உண்டியல் கலசங்களும் ஒரு புறத்தே இருக்கும். துணிவு படைத்தோர் இதனைச் சுழட்டிக்கொண்டுபோகிறதுமுண்டு! ஏமாற்றமடைந்த பக்தகோடிகள் "அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" என்று கூறிச் சமாதானமடைவர். உச்சி வேளைகளில், இரவுக் காலங்களில், வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் அய்யனார் பள்ளிகொண்டிருக்கும் அக் கோவில்பக்கமாகத் தனியே போக மக்கள் அஞ்சுவார்கள். கிராமங்களிலோ, தங்களது இல்லங்களிலோ நோய்கள் வந்தால் அய்யனார் சாத்தனுக்குக் கொடை போட்டுக் கொடுக்கிறேனென்றாவது நூதனமான உருவங்கள் செய்து வைத்துக் கோவிலை அலங்கரிக்கிறேனென்றாவது பிரார்த்தித்துக் கொள்வார்கள்.

இவ்வாறாக, கிராமங்களில் பல குட்டித் தேவதைகள் தலை நீட்டவே, அறியாமையும், சுரண்டலும்—சுரண்டப்படுவோரும், ஏமாற்று வித்தைகளும் 'அருகுபோல் தழைத்து ஆல்போல் படர்ந்து வளர்ந்து அமரத்வம் பெற்றுவிட்டன—இதன் காரணமாக கிராமமக்களும் கிராமங்களும் முன்னேற முடியாது போயிற்று.


## இஞ்சுக்கு ஒரு இசக்கியம்மன்......

திராவிடநாட்டிலே உள்ள கிராமங்களில் வதியும் தேவதைகளுக்குக் குறைச்சலில்லை. காளியம்மன், மாரியம்மன், முப்பிடாரியம்மன், முத்தாரம்மன், வடக்குவாசல் செல்லியம்மன், இசக்கியம்மன், புட்டாரத்தியம்மன், பேச்சியம்மன், சமயபுரத்தாள், வண்டிமலைச்சி, வலதி, அறம்வளர்த்தாள், ஆயிரத்தாள், குரங்கணியம்மன் என்று பெண்பட்டாளத்தின் பெயர்களை எடுப்பதானால் ஒரு தனியான சொற்களஞ்சியமே தயாரித்தாகவேண்டும்! 'சாணுக்கு ஒருபேய், முழத்துக்கு ஒருபாம்பு, என்கிறபடி இஞ்சுக்கு ஒரு இசக்கியம்மன், அடிக்கு ஒருதடிவீரன் என்று சொல்லலாம்! பார்வை படுமிடமெல்லாம் சிலைகள், சாமிகள், கோவில்கள்—இவைதான் கிராமங்களாகக் காட்சியளிக்கின்றன.

## நோயை அனுப்ப ஒரு தெய்வம்......

மேற்குறித்த 'அம்மன்களுக்கு' சாதாரணமாக கிராமத்திற்கு வடக்குப் பக்கத்தில் வடக்கே பார்த்தவாசல்கள் வைத்துக் கோவில்கள்கட்டி, அவற்றின் உருவங்களை செய்து வைத்து (கற்பனை உருவங்கள்) வணங்குவார்கள். அம்மன்களுக்குக் கோபமும் வைராக்கியமும் அதிகமுண்டு என நம்பிவந்த

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




காட்சி 37.

[தாசி வீடு]

உறுப்பினர்:—தாசி கமலா, வேவா (மைனர் வேடம்), சர்க்கிள் இன்ஸ்பெக்டர், போலீஸ்.

கதை அமைப்பு:-வேவா மைனர் வேடத்தில் தாசி கமலா வீட்டிற்குச் சென்று, அவள் வாக்குமூலத்தைச் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் காதில் விழச் செய்து, அவளை அரஸ்ட் செய்து கொண்டு போகிறார்]

தாசி கமலா:- [வீணையுடன் பாடிக்கொண்டிருக்கிறாள்]

(15) [பாட்டு: 'மன்மத லீலையை...' எ. மெட்டு]

எவ்வகைப் பாடலைப்
பாடுவீர் அந்தோ
இந்நாள் நமக்கேனோ
ராமாயணம்... (எ)
செந்தமிழ் மொழியும்
சீர்நிலையும் கொண்டு
அந்த நாள் ஆண்டநம் ராவணன்
யார் புகல்... (எ)
வஞ்சகமே கொண்டாரியர்தாம்
வாழ்ந்திட யாகம் செய்தார்-அதை
அஞ்சாமலே எதிர்த்தொழித்துத்
தமிழகம் ஆண்டவன் ராவணனே
மிஞ்சும் பகை கொண்டோடியே
போர் செய்ய இராமன் தனை
அழைத்தார்-அவன்
நஞ்சனை துரோகி விபீஷணன்
உதவியால் போரதில் வென்று
விட்டான்-அதனாலினி (எ)

வேவா:-[ஒரு புதிய மைனரைப் போல் சென்று 'சீட்டி' அடிக்கிறான்]

கமலா:-[புதிய மைனரைக்கண்டு பூரிப்போடு எழுந்து வந்து சாகசமாக] சர்மா....உள்ளே வாருங்கள்...!! [என்று கூறி அழைத்துச் செல்கிறாள்]

வேவா:-வந்து கொண்டுதானே இருக்கிறேன்...

சர்க்கிள் இன்ஸ்பெக்டர்:—[போலீஸாருடன் உள்ளே சென்று மறைந்து கொள்கின்றனர்.]

கமலா:-உட்காருங்கள்! எந்த ஊரோ? இந்தப் பக்கத்திற்கே புதிதுமாதிரித் தெரிகிறதே...?

வேவா:-ஏன்! உனக்குத் தெரியாத ஆசாமியே இந்த ஊரில் இல்லையா?

கமலா:-உங்களைப் போன்ற மைனர்களில் எனக்குத் தெரியாதவர் ஒருவர்கூட இருக்க முடியாதே?

வேவா:- ஏன்? இருக்கிறார்கள் என்பதற்கு என்னையே ஒரு அத்தாட்சியாக வைத்துக் கொள்ளக் கூடாதோ...?

கமலா:-அது எப்படி முடியும்? நீங்களுந்தான் இதோ வந்து விட்டீர்களே!

வேவா:-சரி! நான் யார் தெரியுமோ?

கமலா:—தெரிகிறதே..! இந்த ஊரிலேயே என் அன்பிற்குப் பாத்திரமாகாதிருந்த கடைசி மைனர் என்று! உம். வாங்கோன்னா... வந்த காரியத்தை மறந்து விட்டு என்னென்னமோ பேசுறீங்களே...?

வேவா:-சரி! உன் அன்பிற்குப் பாத்திரமான மற்ற மைனர்களும் இங்கே வந்து விட்டால், என்ன செய்வது?

கமலா:-அப்படியாரும் வரமாட்டார்கள்! வந்தாலும் சமய சந்தர்ப்பம் அறிந்து நடந்து கொள்வார்கள்! நீங்கள் அதற்காக ஒன்றும் பயப்படவே வேண்டாம்! தைரியமாக இருக்கலாம்!

வேவா:-யாரோ? விஸ்வன் என்றொருவன் உன்னை நேசிப்பதாகக் கேள்விப்பட்டேனே...!

கமலா:-ஆமாம். ஆனால், அவர் இங்கு வந்த அன்றே எந்தப்பாவியோ ஒருவன் திடீரென்று சுட்டுக் கொன்று விட்டானே!

வேவா:-அய்யய்யோ...! [என்று பயந்து எழுந்திருக்கும் போது, நூறு ரூபாய் நோட்டொன்றைக் கீழே நழுவ விடுகிறான்]

இங்கே உன் தயவை நாடி வருகிறவர்களுக்கெல்லாம் அந்தக் கதி தானா...? அப்படியானால், எனக்கும் அதே கதிதான் என்று சொல்லு! சரிசரி! தாயே, உனக்கு ஒரு கோடி வணக்கம்! நான்போய் வருகிறேன். [என்று கூறி விட்டுக் குனிந்து நூறு ரூபாய் நோட்டையும் எடுத்துக்கொண்டு ஓட முயல்கிறான்.]

கமலா:-[வேவாவை மறித்து] அய்யே! உங்களைப்போல் பயந்த ஆசாமியைப் பார்த்ததே இல்லை. விஸ்வனைச் சுட்டுக் கொல்வதற்காகவே ரஞ்சன் இங்கே கூட்டிக் கொண்டு வந்து, அவன் காரியத்தை முடித்துக் கொண்டான்! உங்களை அப்படி யாரும் கூட்டிக் கொண்டு வரவில்லையே? நீங்களாகத்தானே வந்தீர்கள்? ஏன் பயப்படுகிறீர்கள்? அந்த...நூறு ரூபாய் நோட்டை...எனக்குக் கொடுக்கத்தானே கொண்டு வந்தீர்கள்......? திரும்பக் கொண்டு போகப்பார்க்கிறீர்களே...! விடுவேனோ!! உம்... இப்படிக்கொடுங்கோன்னா...!!!

வேவா:-அடடே......! ரூபாய் போனால் பரவாயில்லை! உம். இந்தா இந்த நூறு ரூபாய் நோட்டையும் நீயே வைத்துக்கொள்! நான் உயிரோடு இருந்தால்தானே ...இதுபோல் இன்னும் பல நூறு ரூபாய் நோட்டுகள் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா?

கமலா:-ஆ! நூறு ரூபாய்!! இந்த

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

# கூத்தியாள் குப்பாயி!

போட்டி

எண் 11.

பாலப்பட்டி சேரியிலிருந்து பணம் சம்பாதிக்க—இல்லை—கால்வயிற்றுக் கஞ்சிக்காகக் கடல் கடந்து பெனாங்கு சீமைக்குச் சென்றவர்கள் எத்தனையோ பேர்! அவர்களையெல்லாம் பணம் சம்பாதிக்கப் போனவர்கள் என்றுதான் ஊரிலுள்ளவர்கள் சொல்லி வந்தார்கள். அது எவ்வளவுதூரம் உண்மை என்பதைத் தெரிந்துகொள்ள யாருக்கு அக்கறை?

அய்ம்பது குடிசைகளிருந்த அந்தச் சேரியில், பெனாங்குச் சீமைக்குப் பலர் போக ஆரம்பித்தபிறகு, எட்டே ஆண்டுகளில் எஞ்சி நின்ற குடிசைகள் எட்டுத்தான். மற்றவைகளெல்லாம் சரிந்து தரைமட்டமாகி இருந்த விடந்தெரியாமல் மறைந்துவிட்டன. இதற்கெல்லாம் காரணம் பெத்தான் மகன் பெரியண்ணன் தான்! "அவனை இனிமேல் ஊருக்குள்ளேயே விடக்கூடாது" என்று ஊரிலுள்ள பெரிய சாதிக்காரர்களில் சில பணக்காரர்கள் பேசிக்கொண்டனர். அவர்கள் காய்ந்து விழுந்ததற்குக் காரணம், தங்கள்பண்ணையிலிருந்த அந்தச் சேரிப் பயல்களையெல்லாம் அவன் பெனாங்குச் சீமைக்கு அனுப்பிவிட்டதுதான். பண்ணையில் வேலைசெய்யும் பயல்களின் 'வேலையை'ப்பற்றித்தான அவர்களுக்குக் கவலையே யொழிய பயல்களின் கஷ்டங்களைப்பற்றிக் கவலைப்படுபவர்கள் எவருமில்லை. அந்தப் பண்ணைக்காரர்கள் தங்கள் வீட்டு நாய்க்குக் கொடுக்குமளவு உணவு கொடுத்திருந்தால்கூட அந்தப் பயல்கள் நாட்டைவிட்டுப் போயிருக்கமாட்டார்கள்.

பின், கால்வயிற்றுக்கேனும் கஞ்சி கிடைக்கும்படி செய்துவரும் பெத்தான் மகன் பெரியண்ணகை கங்காணி பெனாங்குச்சீமைக்கு ஆள் அனுப்பி வருவது பிடிக்கவில்லையென்றால், அந்தச சேரி வாழ் மக்களின் நலனுக்காக இந்தப் பெரிய சாதிக்காரர்கள் செய்துவந்ததுதான் என்ன? ஏன் அவன்மேல் இந்தப் பொச்சரிப்பு அவர்களுக்கு?

பாலப்பட்டி மிராசுதார் பண்ணையில் வேலை செய்து வந்த பழனி பெனாங்குச் சீமைக்கு ஓடிப்போனதற்கு கங்காணி பெரியண்ணன்தான் காரணமென்றால், சரி என்று கூறுகிறவர்கள், பண்ணையிலே பல ஆண்டு தன் உடலையே பணயம வைத்து உழைத்து உருக்குலைந்தும் ஒரு மாறுதலும் அவன் வாழ்வில் ஏற்பட்டு விடவில்லையே, மிராசுதாரரின் மிரட்டலிலே மட்டும் நாளுக்கு நாள் அதிகாரத்தொனி அதிகரிக்கிறதே—அது பொறுக்காதுதான் ஓடினான் என்றால் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது?

"அந்தப் பரதேசிப்பயல் ஓடினது தான் ஓடினானே அந்தப் புள்ளையை உட்டுட்டு ஏ ஓடுனா? அப்புடுதான் என்ன பெரிய புள்ளையா? அவெ பொறந்து பத்து வருஷந்தானே ஆகுது? தாயில்லாப் புள்ளே! திடுருன்னு நானும் போயிட்டா என்ன செய்யறதுன்னு தானே அந்தப் பங்காரு இந்தப் புள்ளையை அந்தப் பழனிக்குப் புடிச்சுக் குடுத்துப்புட்டுப் பரலோகம் போயிட்டான்! இவென் இப்படி செய்வான்னா அவென கண்டான்?" இது, பழனி தன் பத்து வயதுள்ள மனைவி குப்பாயியை விட்டு விட்டு பெனாங்குச் சீமைக்கு ஓடிய பிறகு பாலப்பட்டி சேரிவாழ் மக்களின் தினசரி பேச்சுகளில் ஒன்று. இந்த நிலையில் குப்பாயி மக்கள் அகராதிப்படி அனாதைதானே?

* *

சில மாதங்களுக்குப் பின் பாலப்பட்டி பள்ளிக்கூடத்திற்கு பாண்டுரங்கன் என்னும் ஆசிரியர் புதிதாகப் போடப்பட்டான். அவன் ஒரு ஆதி திராவிடன்தான். சேரியைத் தவிர அவனுக்கு வேறு எங்கு இடம் கிடைக்கும்? பத்து வீடுகளுள்ள சிறு கிராமமாக இருந்தால் என்ன? பத்தாயிரம் வீடுகளுள்ள பட்டணமாயிருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதானே?

அந்தச் சேரியிலே அவனுக்காக ஒரு குடிசையை ஒதுக்கிவிட்டார்கள். சில நாட்கள் தானாகவே தனக்கு வேண்டியவைகளைச்செய்து சாப்பிட்டுக்கொண்டிருந்தான். பாண்டுரங்கன் மணமாகாத வாலிபன்தான். ஆசிரியர் பயிற்சி முடிந்தபிறகு அந்த ஊரில்தான் முதன் முதலாகத் தன் தொழிலில் இறங்கினான்.

"ஏந்தம்பி! இவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு நீயே காச்சிக்குடிக்கிறியே யாரையாவது கூட்டியாறதுதானே? இல்லாட்டி அந்தக் குப்பாயிப்புள்ளே சும்மாதானே திரியுது? அதெ கஞ்சி காச்சி ஊத்த வச்சுக்கோ! யாருமில்லாத அனாதெதான் அந்தப்புள்ளே, ஒனக்கும் ஒதவி செஞ்சமாதிரியும் இருக்கும்: அதுக்கும் கஞ்சி ஊத்தின மாதிரியுமிருக்கும்." என்று சிலர் கூறுவார்கள். இது ஒருவிதத்தில் பாண்டுரங்கனுக்கு ஆறுதலாகவும் உதவியாகவுமிருந்தது என்றே சொல்ல வேண்டும்.

* *

யார் வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும், உண்டாலும் உண்ணாவிட்டாலும் காலம் அவர்களுக்காகக் காத்திருப்பதில்லையல்லவா? புரண்டுசென்ற காலச் சுவட்டிலே கணக்கற்ற காட்சிகள்; மாறுதல்கள், இருந்துதானே ஆகவேண்டும்?

பத்து வயதாக இருந்த குப்பாயி பருவமடைந்து சிலவாண்டுகளும் கடந்துவிட்டன. இன்னும் பாண்டுரங்கனுக்குக் கஞ்சி காய்ச்சி ஊத்திக்கொண்டுதானிருக்கிறாள். அவளுக்கு வேறு கதியேது?

இந்தச்சமயத்தில், பெனாங்குச் சீமைக்குச் சென்றவர்கள் இரண்டாவது உலக யுத்தத்தின் காரணமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். ஜப்பானியரின் ஆக்ரமிப்பு அதிக வேகமாக மலேயாவை நோக்கி வந்துகொண்டிருந்ததால் கப்பல் போக்குவரத்துகள் திடீரென்று நிறுத்தப்பட்டுவிட்டன. பாலப்பட்டிச் சேரியிலிருந்து சென்றவர்கள் ஒருவர்கூடத் திரும்பி வரவில்லை. அதனால் குப்பாயி, தன் புருஷன் பழனிமட்டும் திரும்பி வரக்கூடும் என்று எப்படி நம்பமுடியுய?

ஜப்பானிய ஆக்ரமிப்பினால் அவதிப்படும் மலேயா வாழ் தமிழ்நாட்டு மக்களைப்பற்றி, பள்ளி ஆசிரியர் பாண்டு

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

**தோழர்களே!**

3ம் பருவத்தில்

11-வது கதை இது!

இன்னும் 2 கதைகள்

தொடர்ந்து வெளிவரும்!

★

எல்லாவற்றையும்

படித்து வையுங்கள்!

பின் தீர்ப்புக் கூறுங்கள்!

# அரசியல் பித்தலாட்டம்!

—◎—

விளம்பரம் ஒரு கலை! அதைக் கையாள நல்ல தேர்ச்சியும் திறனும் வேண்டும். காலத்தையும் மக்களின் தேவையையும் உணர்ந்து விளம்பரப் படுத்தினால் வியாபாரம் வளரும். குளிரும் பனியும் கொட்டுகின்ற நாட்களில் "அய்ஸ் சர்பத்" கிடைக்கும் கும் என்று விளம்பரப்படுத்தினால், விளம்பரம் வீண் செலவாகத்தான் முடியும். அச்சுக்கூலி கொஞ்சம் அதிகமானாலும் பரவாயில்லை என்று கொடுத்து, எழுத்துக் கோப்பவரின் திறமை முழுதும் அதில் காட்டும்படி செய்து—அழகிய பார்டர் கட்டிக் கவர்ச்சிகரமான எழுத்துக்களைப் போட்டு—துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவது ஒரு முறை. இது பாமரரை எய்ப்பதற்காகத் திருவிழாப் போன்ற காலங்களில் உபயோகப்படுவது. படித்த பெரிய மனிதர்களுக்காக பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்கிறார்கள். எங்கு எந்த முறையில் விளம்பரம் செய்யப்பட்டாலும், அதன் நோக்கம் வியாபார வளர்ச்சிதான். வியாபார வளர்ச்சிக்கு விளம்பரம் மட்டும் முக்கியமானதல்ல. விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கும்படி பொருளின் தன்மை இருக்கவேண்டும். விலை மலிவாகவும், சரக்கு நல்லதாகவும் இருந்தால்ஒழியவிளம்பரம்நீடித்த பயன் தராது. விளம்பரத்தின் மூலம் மக்களை ஏய்க்க நினைப்போரின் முடிவு ஏமாற்றமாகத்தான் இருக்கும்.

மதம் ஒரு விலைப்பொருள். அதை மக்களிடையேவிற்கவந்தோர்கள், மகத்துவம் நிறைந்ததென்று கூறினார்கள். இல்லாத ஏதேதோ பல சிறப்புகள் இருப்பதாகக்கூறி மக்களிடம் புகுத்தினார்கள். மதத்தை ஏற்றுக்கொண்ட மனிதன், அதற்கு விலையாகப் பகுத்தறிவையும், சிந்தனாசக்தியையும் கொடுத்தான். இந்து மதத்தை மட்டும் இங்கு குறிப்பிடவில்லை; இஸ்லாமிய மதம், கிருஸ்துவமதம் எதுவானாலும் சரி, அதை ஏற்றுக்கொண்ட மனிதன் அதற்குத் தன்சுயஅறிவை அடகு வைத்து அல்லது விலையாகக் கொடுத்திருக்கிறான்.

மதம் ஒரு விலைப்பொருள் என்று கூறுகிறேனே; அதை, மக்களிடம் விற்க—பரப்ப—செய்யப்பட்ட விளம்பரங்கள் எண்ணற்றன. காவி உடை தரித்த இந்துமதப் பண்டார சன்னதிகளும், வெள்ளை உடை பூண்டிருக்கும் கிருஸ்தவப் பாதிரிமார்களும்மதத்தின் ஏஜண்டுகள்தான். மக்களுக்கு மதத்திடம் ஏற்பட்ட மதிப்பைவிட, அதை விளம்பரப்படுத்திவந்த ஏஜண்டுகளிடம்தான் அதிக மதிப்பு ஏற்பட்டது. இதனால் அவர்களுக்குக் கிடைத்த சுகபோகங்களும், செல்வாக்கும் கணக்கற்றன. இவர்கள் தங்களை ஆண்டவனின் பிரதிநிதி என்றும், திருக்கைலாய பரம்பரையினர் என்றும் கூறிக்கொள்கின்றனர். கிருஸ்தவப் பாதிரிமார்கள் கன்னிகா மடங்களில் நடத்திவந்தக் காமக்களியாட்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல! இந்துமதப் பண்டார சன்னதிகளோ மடத்தின் மர்ம அறைகளில் கோலாகல வாழ்வு நடத்தி வருகின்றனர். கற்பழிப்பதும், கன்னியர்களுக்கு பிள்ளை வரம் கொடுப்பதும்தான் இவர்களின் முக்கிய பணி. இவ்வளவு இழிச்செயல்களையும் 'மகத்துவம்' என்ற திரையிட்டு மறைத்து வந்தார்கள். கன்னிகா மடங்களில் பாதிரிகளுக்கும் மர்களுக்கும் இடையில் இருந்த திரை விலக்கப்பட்டுவிட, உள்ளே நடக்கும் ஊழல்களை மக்கள் புரிந்து கொண்டனர். இந்த அக்கிரமத்தை ஒழிப்பதற்கான முயற்சியும் எடுத்துக் கொண்டனர்—ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

இங்கு—இந்த நன்றிகெட்ட நாட்டில்—நம்முடைய இருபத்தைந்து ஆண்டு இடைவிடாதபிரச்சாரத்திற்குப் பிறகு—மக்கள் வாழ்வு மலர சமுதாயத்தில் எந்தச் சீர்திருத்தம் தேவை என்று கூறினோமோ அந்தக் குற்றத்திற்காக நாத்திகர்கள் என்று பழித்துக் கூறப்பட்டு-நயவஞ்சகக்காரர்கள் வீசிய கற்கள் நம்முடைய இரத்தத்தைச் சுவை பார்த்து மண்ணிலே கொட்டும்படி செய்யப்பட்ட பிறகு—மக்கள் நாம் கூறியது உண்மை என்பதை ஓரளவு புரிந்து கொண்டிருக்கின்றனர். அதன் எதிரொலிதான் இன்றையச் சட்டசபையிலுள்ள "இந்து மத அறநிலைய பாதுகாப்பு" மசோதா!

இந்து மதத்தை விளம்பரப்படுத்த ஏற்பட்டுள்ள சாதனங்கள் உலகத்தில் வேறு எந்த மதத்திற்கும் ஏற்பட்டிருக்காது. கிருஸ்துவ மதத்திற்கு ஒரு பைபிளும், இஸ்லாமிய மதத்திற்கு ஒரு குரானும்தான் உண்டு. இந்து மதத்திற்கோ எண்ணற்ற நூல்கள் இருக்கின்றன. ஆயினும், அவை அத்தனையும் வெறும் குப்பைகள். விலை போகாத சரக்கிற்கு விளம்பரம் அதிகமாகத் தேவைப்படுவதைப்போல்ஒன்று மற்ற இந்து மதத்திற்கு விளம்பரங்கள் கணக்கற்றன. அதிலே ஒன்றுதான் இந்துமத மடாலயங்கள்.

சமணமதம் நாட்டில் வெகுவாகப் பரவத் தொடங்கியபொழுது, அதற்கு எதிராகசைவமதத்தைப்பரப்புவதற்கு-விளம்பரப்படுத்துவதற்கு-அந்தக் கால மன்னர்களால் ஏற்படுத்தப்பட்டதுதான் இன்றைய மடாலயங்கள். முன்னாள் மடாதிபதிகளின் போக்கு எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும், இன்றைய மடாதிபதிகளின் போக்கில் மகத்துவமோ மதப்பிரச்சாரமோ துளிகூட இல்லை. இந்து மதத்தைப் பற்றி, மக்கள் மன்றத்தில் நாலு வார்த்தைகூடப் பேசுவதற்கு யோக்கியதையற்ற இவர்கள் மதத்தை வளர்க்கிறார்கள்—பாதுகாக்கிறார்கள்-என்று கூறுவது சுத்தமுட்டாள்தனம். மடத்தின் சொத்துகளையும், வருமானத்தையும் கொண்டு உல்லாசவாழ்வுநடத்தி, இன்பத்தில் திளைத்துக்கிடக்கிறார்கள் இன்றைய மடாதிபதிகள். முற்றும் துறந்த சாமியார்கள் என்று கூறிக்கொண்டிருக்கும் இவர்களின் வாழ்வு, குறுநில மன்னர்களின் ஆடம்பர வாழ்வைப்போல டாம்பீகம் நிறைந்ததாக இருக்கிறது. காமக்குரோதாதிகளை அகற்றி விட்டதாகப் பீத்திக்கொள்ளும் இவர்கள், காமக்கடலில் கரைகாணாது தவிக்கும் கயவர்களாக இருக்கின்றனர். இவர்களால் கற்பழிக்கப்பட்டு நாதியற்று நடுத்தெருவில் விடப்பட்டிருக்கும் பெண்கள் அநேகர். மனித சமுதாயத்தைச் சுரண்டிக் கொழுத்துச் சுகபோகத்தில் மாங்கிக்கிடக்கும் மடாதிபதிகளின் எத்துவேலைகளை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். இனி இவர்களின் வாழ்வு மங்கி மடிய வேண்டியதுதான்.

இன்றைய நாட்டு நிலை முற்றிலும் மாறிவிட்டது. வெத்துவிளம்பர்தாரிகளையும், பகட்டு வேஷக்காரர்களையும் மக்கள் வெறுக்கத் தொடங்கிவிட்டனர். இனியும் நிலைமை நீடிக்குமானால், இந்த அயோக்கியர்களை மக்கள் மன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தி "சமுதாய ஒற்றுமையையும், வளர்ச்சியையும் குலைத்த துரோகிகள்" என்று குற்றம் சாட்டி, தக்க தண்டனை கொடுத்துவிடுவார்கள் என்பதை உணர்ந்த ஆளவந்தார்கள், இவர்களுக்கும் இவர்களிடமுள்ள சொத்துகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்காக "இந்து மத அறநிலைய பாதுகாப்பு" மசோதா என்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதா கொஞ்சம் சீர்திருத்தமானதுதான் என்று ஒப்புக்கொண்டாலும், இதனால் ஒன்றும் நல்ல பலன் இல்லை. இதுவும் ஒரு விளம்பரமாகத்தான் முடியும்.

இந்த மசோதா, உளுத்துப்போன உத்திரத்திற்குச் சாயம் பூசுவது போல்

றதுதான். உண்மையான சமுதாயச் சீர்திருத்தத்தை விரும்பும் எந்த அறி ஞனும், இந்த மசோதா ஒரு புரட்சிகர மானது என்று ஒப்புக் கொள்ளமாட் டான்.

மக்களின் மனநிலை புதியதோர் சமுதாய அமைப்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது கடவுளையும், மதத்தையும்—மதத்தை வளர்க்கும் மடாதிபதிகளையும் மக்கள் வெறுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை உணர்ந்த அரசாங்கத்தார், அவர்க ளுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்து டனேயே இந்தமசோதவைக்கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும், இந்த மசோதாவின் மூலம் தங்களைப் 'புதுமையை விரும்பும்புரட்சி வீரர்கள்' என்று விளம்பரப்படுத்திக் கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். காரணம் வருங்கால அரசியலில் பழமை விரும் பும் பத்தாம் பசலிகளுக்கு இடமிருக் காது என்பதை உணர்ந்துவிட்டது தான்! இந்த எத்து வேலைக்காரர் களின் விளம்பரத்தைக் கண்டு மக்கள் எளிதில் ஏமாந்துவிடமாட்டார்கள். இந்த மசோதாவைப் பற்றி உண்மை யான விமர்சனம் கூறவேண்டுமானால், இதுவும் ஒரு அரசியல் பித்தலாட்டம் என்றுதான் கூறவேண்டும்.

மனித சமுதாய வளர்ச்சியை, புல்ல ரிக்கும் கரையான்களான இந்த மடா திபதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று மக்கள் கூறத்தொடங்கியிருக் கும் நாட்களில், சென்னை அரசாங்கத் தார் "இந்து மத அறநிலையப் பாது காப்பு" மசோதாவைக் கொண்டுவந்தி ருப்பது, அரசியல் சரித்திரத்தில் ஒரு கேலிக்கூத்துதான். ஆளவந்திருப் ருப்போருக்கு மக்களின மனநிலை தெரியாது என்றும் கூறமுடியாது. மக்கள் சமுதாயத்தில் தீவிரமாகப் பர விவரும் சீர்திருத்தவேகத்தைத் தடுப்ப தற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிதான் இந்தத் திட்டம். தங்க நகை கேட் கும் காதலிக்கு, வெள்ளி நகையில் தங் கமுலாம் பூசித்தரும் நயவஞ்சகக் காதலனைப் போல், சீர்திருத் தத்தை விரும்பும் பாமரமக்க ளின் கண்களில் மண்ணைத் தூவி மறைத் துவிடுவதற்காகக் கொண்டு வரப்பட்டி ருப்பதுதான் இந்த மசோதா!

இந்த மசோதா சம்பந்தமாகச் சட்ட சபையில் நடந்திருக்கும் காரசாரமான விவாதங்களை நோக்கினாலே தெரி யும், இது வெத்து விளம்பரம் தான் என்பது. மசோதாவை ஆதரிக்கும் பிர தமர் ஓமந்தூரார் கோஷ்டியார், தங்க ளையும் சீர்திருத்தவாதிகள் தான் என்று விளம்பரப்படுத்திக்கொள்ள இந்த மசோதாவை ஒரு சாதனமாகக் கொண்டிருக்கிறார்கள். அதேசமயத் தில் மதத்தைப் பாதுகாப்பதற்குத்தான் இந்த மசோதா என்று கூறுவதற்கும் தயங்கமாட்டேன் என்கிறார்கள். இரண்டும் கெட்டான்களாக இருக்கும் இவர்களுடைய நிலை பரிதாபத்திற் குரியது. இந்த மசோதாவை எதிர்க் கும் பிரபலஸ்தர்கள், அத்தனை பேரும் பிரகிருதிகள்தான். மக்களி னத்தில் தோன்றாதவர்கள். ஆனால், விலங்குகள் அல்ல பூதேவர்கள். மக் களின் நல்வாழ்விற்கான வழிவகை களை வகுப்பதற்காக மக்களால் சட்ட சபைக்கு அனுப்பப்பட்டிருக்கிறோம் என்பதையும் மறந்துவிட்டு, மதத் திற்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, மதத்திற்கு ஆபத்து என்று கூப்பாடு போட்டு, தங்களை மத பாதுகாப்பாளர் கள் என்றுவிளம்பரப்படுத்திக்கொண்டு, மடாதிபதிகளின் புன்னகையைப் பெற முயர்சிக்கிறார்கள். சமயம் வரும் பொழுது, முன்னவர்கள் தங்களைச்சமு தாயச் சீர்திருத்த வாதிகள் என்றும், பின்னவர்கள் தங்களை மதப்பாதுகாப் பாளர்கள் என்றும் கூறிக்கொண்டு மக்களிடம் ஓட்டு கேட்க வருவார்கள். இந்தச் சூதுமதியினரின் சூழ்ச்சிகளை மக்கள் தெரிந்து கொண்டபடியால், இந்த விளம்பரங்கள் எதிர்பார்க்கும் அளவு பயன்தராது என்பதை வருங் காலம் உணர்த்தும்.

உண்மையாகவே சீர்திருத்த நோக் கமும், சமுதாய வளர்ச்சியில் அக்கறை யும் இன்றைய ஆளவந்தார்களுக்கு இருக்குமானால் "இந்துமத அற நிலையப் பாதுகாப்பு" மசோதா இன் றைக்குத் தேவைப்பட்டிருக்காது. அதற்குப் பதிலாக "மடாலய ஒழிப்பு" மசோதாதான் தோன்றியிருக்கும். இதுபோன்ற முற்போக்கான திட்டங் களைக் கொண்டுவந்து செயலாற்றும் திறமையும், மனப்பான்மையும் தேசி யம்பேசும் அரசியல் பித்தலாட்டக்கா ரர்களிடம் கொஞ்சம்கூட கிடையாது. இவர்கள் விரும்புவது விளம்பரமே தவிர முற்போக்கை அல்ல. புரட்சி கரமான திட்டங்களை வகுத்து, மக்க ளின் வாழ்வில் புதுமலர்ச்சியை ஏற் படச் செய்யும் அரசியல் வாதிகள் இன்றையச்சட்டசபையிலில்லை. உண் மையான சீர்திருத்தவாதிகள் சட்ட சபைக்கு வெளியில் உலவிக்கொண்டி ருக்கிறார்கள். வருங்காலத்தில் நாட் டாட்சி அவர்கள் கைக்கு வரும் பொழுதுதான்—திராவிடநாடு திரா விடருக்காகும் பொழுதுதான்—மக் களை எய்த்துவாழும் எத்தர் கூட்டத் தை ஒழிக்கமுடியும். மக்களின் வாழ் வில் புதுமலர்ச்சியைக் காணமுடியும். நாடும் இன்பநாடாகும். அந்தநாள் எந்தநாளோ?

புத்ததாசன்.

## கூறாதே!

"என்னைச் சுமந்து செல்!" என்று உயிரோடிருந்து கொண் டே, மமதையோடுகூறி வாட்ட சாட்டமாகப் பல்லக்கில் ஏறுப வன், ஈரப்பசையற்ற பெருங்கோ டியன்!

ஆறறிவும் பிற அவயவங் களும் உடையவனாயிருந்தும் அவற்றால் நல்ல செயல்கள் பல புரிந்து வாழாமல், "நான் சுமக்கிறேன்!" என்று ஒப்புக் கொண்டு முன் வருபவன் முழு மூடன்!

இத்தகைய கொடியோன், மூடன் ஆகியவர்களுக்கு அறத் தையும், அறத்தினுடைய நெறி முறைகளையும் எடுத்தெடுத்துக் கூறுவதால் இம்மியும் பயனில் லை. ஏன்? இருதிறத்தாருக் கும் சிந்தனை என்பதே செத்து விட்டது.

—திருவள்ளுவர்.

நடக்கவிருப்பவை

### பூட்டுத்தாக்கு

1-3-48-ல் "திராவிடர்க் கழகம்" அமைக்கவிருக்கிறது. உறுப்பினர் களும் அபிமானிகளும், மாலை 5-மணிக்கு 'பகுத்தறிவு'ப் படிப்பகத் திற்கு தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தோழருக்குத் தொல்லை "வீடணர்கள் வேலை"

பூட்டுத்தாக்கு பிப். 23.

கழக உறுப்பினரும் தேனீர்க்கடைத் தோழருமான மகாதேவன் அவர்கள் சில ஆண்டுகளாகவே, அதிகாரிகளின் அனுமதியுடன் கட்டணம் செலுத்திப் பொது இடத்தில் கடை வைத்திருந் தார். சில கோடரிக்காம்புகளும் இனத் துரோகி 'வீடணர்களும்' கடைக்கு வரும் "விடுதலை"யை நிறுத்தச் சொல்லி, நிறுத்தாதுபோகவே, 'பார்ப் பன" அதிகாரிகளிடம் கழகத்தைச் சேர்ந்தவர் என்று கூறி கடையை அப்புறப்படுத்திவிட்டனர். இப்பொ ழுது கடை வேறு இடத்தில் வெற்றி கரமாக நடைபெறுகிறது.

### திருத்தம்.

சென்ற 12—2—49ம் நாள் இதழில் 12ம் பக்கம் 3வது கலத்தில் தென்னாடு மாத வெளியீட்டின் ஆசிரியர் எஸ். கே. சாமி என்றிருப்பது எஸ். ஆர். சாமி என்று இருக்க வேண் டும்.

ராஜா முத்தையா

# கலை வளர்ச்சி!

“காதல் கனிரசமே! கட்டழகே கதவைத்திற!”

“கனபாடிகளே! இந்த காந்தம் ஏமாந்தவளல்ல—போய்வாருங்கள்”

“கொஞ்சுமொழிக் கோதையே! கெஞ்சுகின்றேன்-கதவைத்திற”

“கனபாடிகளே! யாரை ஏய்க்கப் பார்க்கிறீர்-சற்று நேரத்திற்கு முன், பெருமாள் கோவிலில் காலட்சேபம் செய்தீரே-அதை மறந்துவிட்டீரோ!

“தாசிகள் தெய்வத்தால் நிந்திக்கப்பட்டவர்கள்-அவர்களை பார்ப்பதே பாபம்”-என்று, பலருடைய கைதட்டல்களுக்கிடையே--காலட்சேபம் செய்தீரே அதை மறந்துவிட்டு, இப்போது இந்த-தாசி காந்தத்தின் வீடுதேடி வந்து, காதல் மொழி பேசுகின்றீரே!”

“அடடா! இதற்காகவா இவ்வளவு கோபம்! அதெல்லாம், ஊருக்குத்தானேடி உபதேசம்!”

* *

பின் காந்தத்தின்-கோபம் கரைகிறது-கதவு திறக்கிறது-கனபாடிகளும் உள்ளே நுழைந்துவிடுகிறார்.

* *

இந்தச் சம்பவம்-கற்பனையாகத் தீட்டப்பட்டது.

கதைக்காக அல்ல-ஒரு கருத்துக்காக!

* *

கலை வளர வேண்டும்! கலைஞர்கள் வாழவேண்டும்!

—என்ற பெருநோக்கை மனதில் கொண்டு, “காரைக்குடி ஸ்ரீ ராம பாலகான விநோத சபா” 1943ல் தோழர் வைரம் அருணாசலம் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

நாடகசபா தோற்றுவித்த சில ஆண்டுகளுக்குள்ளேயே “நாடகப் புரவலர்-நாடகக்கலாமணி” என்ற பட்டங்கள் அவரை நாடி வந்தன.

அந்த அளவிற்கு அவர் நாடகங்களை நடத்துவதில் நல்ல திறமை பெற்றிருந்தார்.

* *

“கலை வளர்க்குமிடத்தில்—கட்சி வேறுபாட்டையும், மத வேறுபாட்டையும் கவனிக்கக் கூடாது” என்ற உயர்ந்த லட்சியத்தை மனதில்கொண்டால்தான், கலை வளர்க்கும் முயற்சியில் வெற்றி பெற்றவர்களாக முடியும். இல்லையேல் தோல்வி அவர்களைத் தொடர்ந்துவரும்.

இந்த “உயர்ந்த லட்சியத்தை” மனதில் வைத்துத்தான், வைரம் அருணாசலம் — தம்கலைப்பணியைத் துவக்கினார்.

ஆனால்......

இடையே வந்து சேர்ந்த சில பல “குட்டித் தேவதைகளின்” சாகசப் பேச்சிலே சொக்கி தம் கலை வளர்ப்புப் பணிக்கு, ஒரு களங்கத்தை உண்டு பண்ணிக் கொண்டார்.

திரு வைரம் அவர்கள், சீர்திருத்த நாடகங்களை, மேடையில் நடத்திக்காட்டுகிறார். ஆனால் அந்தமேடையில் நடிக்கும் நடிகர்கள், தங்கள் வாழ்வுப்பாதையில் சீர்திருத்தஉள்ளங்கொண்டு நடக்க எத்தனித்தால் அதை ஒடுக்க எண்ணுகிறார்.

“காட்டிக் கொடுப்பதும்கூட்டிக் கொடுப்பதும்—தமிழ்நாட்டின்ஏட்டிலேயே இல்லை” என்ற கருத்துப்பட, கட்சிவேற்றுமை பாராட்டாது தமிழ் நாட்டின் சகலகட்சிகளும் “விடுதலைப்போர்”தொடுப்பதை “புரட்சி” என்ற நாடகத்தின் வாயிலாகச் சித்திரித்துக் காட்டுகிறார்.

மேடையில் மட்டுந்தான் இந்தப் புரட்சிகாமான மாறுதல்!

நடிகத் தோழர்கள் தங்கள் சொந்தவாழ்வில் கட்சி வேறுபாடு-மதவேறுபாடு, ஆகியவற்றைகளைந்தெறிய முனைந்தால்—முளையிலேயே அந்த முயற்சியை அடக்கிவிடுகிறது நாடகசபாவின் நிர்வாகம்.

எடுத்துக்காட்டாக:—

“கழுத்திலுள்ள, உருத்திராட்சத்தை அறுத்துவிடு—நெற்றியில் பூசியுள்ள திருநீறை அழித்துவிடு—இவையெல்லாம்போலிப்பக்தியின் அறிகுறி”—என்று “புரட்சி” நாடகத்தில் உணர்ச்சியுடன் பேசும் கருஞ்சட்டைத் தொண்டனாக நடிக்கும் நடிகர்—அடுத்த நாள் காலையில் சாப்பாட்டு நேரத்தில், நெற்றியில் திருநீறுடன் காட்சியளித்தால் தான் சாப்பாடு கிடைக்கும்.

இல்லையேல் அன்று அவர் பட்டினிதான்!

இந்த அளவிற்கு நாடகசபாவின் நிர்வாகம் நடிகத் தோழர்கள் மீது “பாசிச—ஜார்” ஆட்சியை தொடங்கிவிட்டது.

நாடகத்தின் மூலமாக நாட்டைத்திருத்தப்புறப்பட்டுள்ள நண்பர் ‘வைரம்’ அவர்கள்—ஊரைத் திருத்தும் ஒப்பற்றபணியிலே—தம் நாடகசபாவிலுள்ள ஊழல்களை மறந்து விட்டாரா?

அல்லது,

கட்டுரையின் முற்பகுதியில் தீட்டிய “காந்தம்—கனபாடிகள்” உரையாடலைப்போல “ஊருக்குத்தானே—உபதேசம்” என்று வாளாவிருந்து விட்டாரா?

* *

1946—ம் வருடம் சென்னை எழுத்தாளர்சிலர், மராத்திநாடகாசிரியர் ‘வரேர்காருக்கு’ ஓர்உபசார விருந்து அளித்தார்கள். விருந்தின் போது ஓர் எழுத்தாளர், அங்கு வந்திருந்த எழுத்தாளர் ஒவ்வொருவரையும் — ‘இவர்கவி’ ‘இவர்கதாசிரியர்’—என்றெல்லாம் வரேர்காருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

‘வரேர்கார்’ மராத்தியில் அறுபதுக்கு மேற்பட்ட நாடகங்கள் எழுதியவர். அறிமுகத்தின் போது அவர் கேட்டார்:

“உங்களிடையே நாடகாசிரியர் யாருமே இல்லையா?”

அங்கு ரேடியோ நாடகக்காரர்கள், சினிமா வசன கர்த்தாக்கள் எல்லோரும் இருந்தனர். எனினும் யாரும் பதில் கூறவில்லை. பக்கத்திலிருந்த மற்றோர் எழுத்தாளர் மட்டும் “அவர் இனிமேல்தான் பிறக்கவேண்டும்” என்று பதிலளித்தார். எல்லோரும் நகைச்சுவையை ரசித்துச் சிரித்தார்கள்.

எனினும் அயலான்முன் இந்த வார்த்தை எழுந்ததே என்றவருத்தம் சிலருக்கு இல்லாமலில்லை.

* *

ஆனால்—இந்தச் சம்பவம் நடந்தது 3 வருடங்களுக்கு முன்பு!

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

# குடி அரசு

26—2—49 சனிக்கிழமை.

## பார்ப்பனர்களின் சிந்தனைக்கு!

கூழுக்குப் போட உப்பு இல்லையே என்பதும் ஒரு கவலைதான்! குறைதான்!

பாலுக்குச் சர்க்கரை இல்லையே என்பதும் ஒரு கவலைதான்! குறைதான்!

காலுக்கு (நடப்பதற்கு) செருப்பு இல்லையே என்பதும் ஒரு கவலைதான்! குறைதான்!

பல்லக்குக்கு (உட்காருவதற்கு) பட்டு மெத்தை இல்லையே என்பதும் ஒரு கவலைதான்! குறைதான்!

கூழுக்கு உப்பு, பாலுக்குச் சர்க்கரை இரண்டும் நாக்கு ருசிக்காகத்தான்!

காலுக்குச் செருப்பு, பல்லக்குக்குப் பட்டு மெத்தை இரண்டும் அங்கங்களின் நலத்தைக்காப்பாற்றுவதற்காகத்தான்!

ஆனால், கூழுக்கு உப்பு, காலுக்குச் செருப்பு வேண்டுமென்கிற கவலை வேறு! பாலுக்குச் சர்க்கரை, பல்லக்குக்குப் பட்டு மெத்தை வேண்டுமென்கிற கவலை வேறு! முந்தியது, குறைந்த பட்சமான கூழைக்குடித்தாவது உயிர் வாழவேண்டுமே என்கிற முயற்சி; இறக்கும் வரையிலும் இடையறாதுழைக்க, எவ்வித இடையூறும் வந்து விடக்கூடாதே என்கிற முன்னெச்சரிக்கை! பிந்தியது, உயர்ந்த பட்சமாய், உணவுக்கு மேற்பட்டதாய், மேனி மினுமினுப்பை வேண்டி மேலான நறுமணத்தோடு தீஞ்சுவையையுடைய பாலுக்கு, மற்றொரு சுவையையும் ஊட்டி மகிழ்ச்சியோடு பருகவேண்டும் என்கிற முயற்சி; தனக்காக நாலு பேர் நடந்து சுமக்கத் தான் நடக்காமலே ஏறிச்சவாரி செய்தாலும், உட்கார்ந்துச் செல்லும் போது உடலுக்கு வாட்டம் வந்து விடுமே என்கிற முன்னெச்சரிக்கை!

கவலை, எச்சரிக்கை என்கிற பெயரளவில், இரண்டும் ஒன்றாகச் சொல்லப்படுவதாக இருந்தாலும், இந்த இரண்டு வகையாரின் கவலையும் எச்சரிக்கையும் வெவ்வேறு நிலையில் பிறந்தவை! வேறு வேறான போக்கில் வளர்பவை! முந்தியது, ஏமாறியதால். பிந்தியது, ஏமாற்றியதால். அந்த வகையில் ஒன்றுக் கொன்று சம்பந்தமுடையவை!

இந்த இருவகையான நிலையும் இப்போதைய நிலைமைகள் அல்ல. பழங்காலத் தமிழ் நாட்டில் நெடுங்காலமாகப் பரிகாரஞ் செய்யப்படாமல் வளர்ந்து வந்த நிலைமைகள்! பின்பு இவ்விரண்டு போக்கும், அதனதன் வழியிலே, போதிய வளர்ச்சியடைந்து விட்ட நிலைமைகள்!

அதாவது கூழுக்கு உப்பு இல்லையே என்கிற நிலைமை வளர்ந்து, வளர்ந்து கூழே இல்லையே என்கிற நிலைமை! பாலுக்கு சர்க்கரை இல்லையே என்கிற நிலைமை வளர்ந்து, வளர்ந்து பலசுவை சேர்த்துப் பருகிய பாலுக்குப்பின், அதை ஜீரணிக்க முடியவில்லையே என்கிற நிலைமை! ஒரு வகையில் இறக்கம்! மற்றொரு வகையில் ஏற்றம்!

இந்த இறக்கமும் ஏற்றமும் ஏன்? இவ்விரண்டையும் சமநிலைப்படுத்தும் வழி என்ன? என்கிற சிந்தனையில், இந்த ஏற்ற இறக்கத்தை அரசியல் துறையில் உத்தியோக விஷயங்களில் சமனிலைப்படுத்த முயன்ற முயற்சிதான் அந்த நாள் ஜஸ்டிஸ் கட்சி!

பல ஜாதிகள், பல வகுப்புகள் உள்ள இந்த நாட்டில், ஏகபோகமாய் ஒரு வகுப்பாரே உத்தியோகங்களில் ஆதிக்கஞ் செலுத்துவது உதவாது, ஒழிக்கப்பட வேண்டியது—எல்லா வகுப்பினரும் இடம் பெறவேண்டும் என்று இதமாக, நீதியைக் காட்டிக் கேட்டபோது புளியேப்பக்காரர்கள் செய்த புன்முறுவலினால்—பொச்சாப்புரைகளால்—திமிர் வாதத்தினால் விளைந்த வளர்ச்சிதான் இன்றையத் திராவிடர் கழகம்!

அறிவுத் துறையின் அதிபதிகள் என்று கூறிக் கொண்டு, அரசியல் உத்தியோக விஷயங்களில் நூற்றுக்கு நூறு தாங்களே இருப்பது சரியல்ல என்பதை, அந்த நாளில் நம் பார்ப்பனத் தோழர்கள் உணர்ந்து, ஏதோ மற்றவர்களும் இடம் பெறட்டுமே என்றெண்ணியிருப்பார்களேயானால்—மற்றவர்களின் உரிமையை நாம் வஞ்சித்தாலும், வஞ்சனையில் ஒரு நேர்மையைக் காட்டுவோம் என்று கருதியிருப்பார்களேயானால், நிச்சயமான முடிவு நீதிக்கட்சியே தோன்றியிருக்காது! அந்த வஞ்சனையில் வளர்ச்சியில்லாவிட்டால், "உத்தியோகங்களில் ஏதோ ஒரு பங்கு" என்று கேட்ட நீதிக்கட்சி ஒழிந்து, உத்தியோகத்தில்மட்டுமல்ல, உலக வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் —ஊராட்சியின் முழுப்பகுதியிலும், எங்களுக்குப் பங்கு அல்ல, உரிமையுண்டு என்று முழங்கும் திராவிடக் கழகம் ஆகியிருக்க முடியாது! இவ்வுண்மையை நமது பார்ப்பனத் தோழர்கள் எண்ணிப் பார்க்கத் தவறுவது — வஞ்சனையை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு போவது நன்மையைத் தரக்கூடியதுதானா? இதை எண்ண வேண்டியவர்கள் அவர்கள்!

அடுத்துக் கெடுப்பது! அணைத்துக் கொல்லுவது! காட்டிக் கொடுப்பது! கழுத்தையறுப்பது! இதுதான் பார்ப்பனீயத்தின் பரம்பரைப் போர் முறை என்பதைச் சுயமரியாதையுணர்ச்சியுடைய ஒவ்வொரு திராவிடரும், ஏன்? வரலாறு அறிந்த ஒவ்வொருவரும் நன்கு அறிவர். இப் போக்கைப் பார்ப்பனீயம் இன்னும் கைவிட்டு விடவில்லை என்பதைத்தான் இன்றைக்கும் பார்க்கின்றோம். இந்த நயவஞ்சக நடத்தை இனியும் வேண்டியதுதானா? இதை எண்ண வேண்டியவர்களும் அவர்கள் தான்!

"திராவிடக் கழகம் வகுப்புத் துவேஷத்தை வளர்ப்பது; திராவிடர் கழகத்தைத் தீர்த்துக்கட்டுக!!"

இது, ஒருபுறம் மத்திய ஏகாதிபத்திய யூனியனுக்குப் பார்ப்பனர்கள் செய்யும் வேண்டுகோள்! மற்றொருபுறம் மாகாணப்

பார்ப்பன அடிமை சர்க்காருக்குச் செய்யும் கட்டளை!

"எங்கள் மீதுள்ள குறைகளைப் பற்றியே கூறிக்கொண்டிராதீர்கள்! உங்களுடைய பல திட்டங்களும் நாங்கள் உவந்து ஏற்றுக்கொள்ளக் கூடியன! அப்படியிருக்க, நீங்கள் கூறும் நாட்டு நலனுக்கு நாமெல்லோரும் சேர்ந்து ஏன் பாடுபடக் கூடாது! யோசியுங்கள்!"

இது, நம் கழகத்திற்கு, கழகத் தந்தை பெரியாருக்குப் பார்ப்பனர்களால் செய்யப்படும் வேண்டுகோள்!

இந்த இருவேறு முயற்சி, பார்ப்பனர்களின் நல்லெண்ணத்தை—நன்னடத்தையைக் காட்டுவதா? நயவஞ்சகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதா? சிந்திக்க வேண்டியவர்கள் அவர்கள்தான்!

தோளோடு தோளிணைத்து நாட்டுக்குத் தொண்டாற்றுவோம் என்று நமக்குக்கூறும் நம் அருமைப் பார்ப்பனர்கள், இந்தமாதம் 19-ம் தேதிதான் சேலத்தில் பார்ப்பன மாநாட்டைக் கூட்டியிருக்கிறார்கள். அப்போது பல தீர்மானங்களையும் செய்திருக்கிறார்கள். செய்யப்பட்டிருப்பதாய்ப்பார்ப்பனப் பத்திரிகைகள் கூறும் தீர்மானங்களிலிருந்து, 'பரம்பரைநரிக் குணத்தை' எப்படிப் பாதுகாப்பது என்கிற ஒரு வழியில் தான் அந்த மாநாடு கவலைப்பட்டிருக்கிறது என்று சொல்லலாமே தவிர, நமக்கு அவர்கள்விடுக்கும் வேண்டுகோளுக்கு ஒத்ததாய்—மனிதப் பண்பைக் காட்டுவதாய்—நீதியையோ நேர்மையையோ விரும்புவதாய் இல்லவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

நாட்டு மக்களை இழிவு செய்வதாய், நாலாஞ் ஜாதி அய்ந்தாம் ஜாதி என்று கூறி மனித உரிமையைச்சூறையாடும் வேதம், வளர்ந்து தழைத்தோங்க வேண்டும்! இது ஒரு தீர்மானம்.

மற்ற வகுப்பு மாணவர்கள் எக்கேடு கெட்டாலும் எங்களுக்குக் கவலையில்லை; எங்கள் வகுப்பு மாணவர்கள் எல்லோருமே உயர்ந்த படிப்புப் படித்தாக வேண்டும். இதற்குத் தடையாய் இருப்பதைத் தகர்த்தெறிய வேண்டும் என்று கூறுவது ஒரு தீர்மானம்.

இப்படி நாங்கள் ஒரு பட்சமாய், எங்கள் நலனுக்கே அஸ்திவாரம் போட்டு வேலை செய்தாலும், எங்களைப்பற்றி யாரும் துவேஷங் கொள்ளக்கூடாது; எங்கள் மீது நாட்டோர் நல்லெண்ணங்கொள்ளச் செய்ய வேண்டியது இன்றைய மாகாண சர்க்காரின் முதல் வேலை என்கிறது மற்றொரு தீர்மானம்.

இன்றைய மாகாண சர்க்காரில் பெரும்பாலோர் சூத்திரர்களாய் இருப்பதினால்தான், பார்ப்பனர்களின் தனி வளர்ச்சிக்குப் பாதகமாய் இருக்கிறது. மாகாண சர்க்காரை ஆட்டிவைத்து அவர்களைக் கொண்டே முதலில் நம் எதிரிகளை அழித்தொழித்து, பிறகு அவர்களையும் ஒழித்துக்கட்டி, நமது நலத்தை நாம் பேணுவதென்றால், மத்திய சர்க்காரைப் பலப்படுத்துவதும், மத்திய சர்க்கார் செயலை விளம்பரப்படுத்துவதும், மத்திய சர்க்கார் பிடிப்பில் இந்நாட்டை நிலை நிறுத்துவதும் தான் நாம் செய்ய வேண்டிய 'திருப்பணி' என்று கூறுவது இன்றொரு தீர்மானம்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய "பார்ப்பனோத்தமர்களின்" பேச்சுக்கள் என்று, பார்ப்பனப் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கும் பேச்சுகளைப் பார்த்தாலும்,

"தாங்கள் வேறானவர்கள்; உயர்ந்தவர்கள்"

என்கிற திமிரையும்,

"யார் எதனால், எப்படி அழிந்தாலும் எங்கள் இனநலம் செழித்து வளர வேண்டும்"

என்கிற சுயஜாதி வெறியையும்,

"எவ்வளவு அயோக்கியத்தனம் செய்தாலும் எங்கள் மீது துவேஷம் கொள்ளாதீர்கள்"

என்கிற இதோபதேசத்தையும்,

"எங்கள் இன நன்மைக்காக இந்த நாட்டை எவனுக்கும் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டோம்"

என்கிற கயமைக் குணத்தையும் தான் கண்டுகொள்ளவேண்டியதாயிருக்கிறது.

மாநாட்டுக்குப் பிறகு, அடுத்தபடியாக, மாகாணத்திற்கு வந்திருக்கும் ஏகாதிபத்தியப் பட்டேலிடம் இவர்கள் காவடி தூக்கி இருக்கிறார்கள் என்பதைப் "பட்டேல் பிரபு" அவர்கள் பேச்சுகளிலிருந்து தெரிகிறது.

பார்ப்பனீயத்தின் அழிவு வேலைகளைப் பகிரங்கப்படுத்தி, நச்சுக் கிருமிகளால் நாசமாகாதீர் என்று நாட்டோரை எச்சரிக்கும் ஒரே ஒரு "விடுதலை"யை ஒழித்து விடவேண்டுமென்கிற ரூபத்தில், நம்மை அண்டவரும் பார்ப்பனர்களின் காவடி ஆட்டம் நடந்திருக்கிறது.

சென்னைச் சத்தியமூர்த்திக்குப் போட்டியாகப், பாம்பே சத்தியமூர்த்தி என்பதாகக் காங்கரஸ்காரர்களால் புகழப்படுபவர் நம் "பட்டேல் பெருமான்" அவர்கள். இந்தப் "பெருமான்" தான், சுரண்டும் கூட்டத்திற்குப் பாதுகாப்பாக, சுரண்டும் கும்பலின் பிரதிநிதியாக "பவநகரை" நமக்கு அருளியவர். இவரின் இப்போதையக் குணாதிசயங்கள் வேறு என்று கூறப்பட்டாலும், ஒரு ஏகாதிபத்திய வெறியைக்காட்டத் தவறவில்லை இவரின் சென்னைப் பேச்சுக்கள்! இத்தகைய 'குணாளர்' "சட்டத்தைக் காற்றில் பறக்கவிட்டு, நியாயத்தை உதறித் தள்ளி, நீதியைக் குழிதோண்டிப் புதையீர்! என்பதாகப் பார்ப்பனீய அடிமை சர்க்காரான, மாகாண மந்திரிசபையினருக்கு உபதேசம் புரிவாரானால் அது ஆச்சரியப்பட வேண்டியதல்ல. விடிந்தால் தெரிகிறது, வெள்ளை முட்டையா? கருப்பு முட்டையா என்கிற சங்கதி!

ஆனால், பார்ப்பனர்கள் பரம்பரையாகவே "நாம் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்" என்று துணிந்து திட்டம் போட்டுச் செயல் செய்கிறார்களே, இதைக் கண்டு நாம் உண்மையாகவே பச்சாதாபப் படுகிறோம்! பார்ப்பனர்களின் திட்டத்தால்—சூழ்ச்சியால் இன்று அவர்களின் எண்ணம்—திராவிடக் கழகம் ஒழிய வேண்டுமென்கிற விருப்பம் நிறைவேறலாம்; நிறைவேற்றியும் விடலாம்.

ஆனால், பின் விளைவு என்ன?

அரசாங்க உத்தியோகத்தில் பங்கு கேட்ட நீதிக்கட்சியை, அய்ம்பதாயிரம் அடிக்கீழ் புதைக்கப் பட்டதாக அகமகிழ்ந்தனர்முன்பு! அந்தப் புதைக்குழியிலிருந்து பெரும்பூதம் தோன்றிவிட்டதே; பங்கல்ல, உரிமை என்கிறதே; உத்தியோகத்திலல்ல, ஊராளும் ஆட்சியில் என்கிறதே! என்று இப்போது ஓலமிடுகின்றனர்! இதை ஒழித்துக் கட்டுவது எப்படி?

இதற்குச் சமாதி எழுப்புவது எப்படி? என்று சதித்திட்டமிடுகின்றனர் இன்று! திட்டத்தின் வெற்றிக்குப் பின் சிந்தை பூரிக்கலாம், உண்மைதான்! ஆனால் சமாதியிலிருந்து மற்றொன்று தோன்றுமே; அது அன்னை அடிப்படையாகக் கொண்டு திராவிடக்கழகத்தைப்போல அகிம்சை வழியில் நில்லா திருக்குமானால், பார்ப்பனீயத்தின் எதிர்காலம், அதைத் தாங்கி நிற்கும் பார்ப்பனர்களின் எதிர்காலம் என்னவாகும்? இதை எண்ணவேண்டியவர்களும் அவர்கள்தான்!

---

(7ம் பக்கத்தொடர்ச்சி)

அப்பொழுது தமிழ் நாடக உலகில் 'பிரசித்தி பெற்ற' நாடகாசிரியர்கள் தோன்றாத-வெளிப்படாத காலம்.

அப்போதையத் தமிழ்நாட்டில்-மேலை நாட்டில் 'ஆபேரா' (OPERA) என்று சொல்லும் இசை நாடகங்களைப் போல, கட்டப்பொம்முநாடகம், தேசிங்குராஜன் நாடகம் போன்ற நாட்டுப் பாடல் நாடகங்கள் 'நாடக மேடை'யில் நடித்துக்காட்டப்பட்டன.

மேலும்—

குறவன்—குறத்தியை இழுத்து வரும் 'குற்றாலக்குறவஞ்சி';

திருட்டுத்தொழிலில் புகுந்து அசகாய சூரத்தனங்கள் செய்து, கால் துண்டிக்கப்பெற்று, தனது விருத்தாந்தத்தை மேடையிலே சொல்லுவதாக அமைக்கப்பெறும் 'திருக்கச்சூர் நொண்டி' நாடகம்;

அருணாசலக் கவியின் "ராம"-நாடகம்;

கோபாலகிருட்டின பாரதியின் 'நந்தன்'—ஆகியவைகளும்—நாடகங்களாக நடிக்கப்பெற்றன.

ஆகவேதான் "தமிழ் நாட்டின் பிரசித்திபெற்ற நாடகாசிரியர்" எனக் கூறிக்கொண்டு யாரும் வீரர்கார்முன் வந்து நிற்கவில்லை.

ஆனால் இப்போதையத் தமிழ்நாடு அந்த நிலையிலில்லை.

இந்தக் காலத்திய தமிழ்நாடக உலகில் 'பெர்னாட்ஷா'க்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே, இந்தப் புதிய சகாப்தத்தில்—கட்சி வேறுபாடு என்ற குறுகிய நோக்கங்கொண்டு திரு 'வைரம்' அவர்கள் நாடகக் கலையை வளர்ச்சியுறச் செய்யலாமென எண்ணினால் நிச்சயம் தோல்வியடைவார்!

—மா. தங்கவேலர்.

---

# திராவிடக்கழக மத்திய நிர்வாகக் கமிட்டி.

திருச்சி, பிப். 20.

இன்று காலை திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் திராவிடக் கழக மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு 18 நிர்வாக உறுப்பினர்கள் வந்திருந்தனர். 13 நிர்வாக உறுப்பினர்கள் வரவியலாமையைத் தெரிவித்துச், செய்யப்படும் தீர்மானங்களைச் செயல்படுத்தத் தயார் என்றும் அறிவித்திருந்தனர்.

கூட்டம் துவக்கப்பட்டவுடன் பெரியாரவர்கள், கழக நிலைமை, காங்கரஸ் திராவிடர் நிலைமை, சில இடங்களில் கா. தோழர்கள் செய்து வரும் காலிச்செயல்கள்—அதற்கு ஒத்துழைத்துவரும் அதிகாரிகள் நிலைமை ஆகியவைபற்றித் தெளிவாக விளக்கிக் கூறி, எக்காரணத்தைக் கொண்டும் நாம் அடக்கத்தை விட்டுவிடக் கூடாதென்று, தோழர்களின் பொறுப்பை வற்புறுத்திக் கூறினார்கள்.

## தீர்மானங்கள்.

பிறகு நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. திரு கோபதி நாராயணசாமி செட்டியார் அவர்களும் திரு. சி. என். முத்துரங்க முதலியார் அவர்களும் காலமானது குறித்து இக்கூட்டம் அவர்கள் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. சர்தார் பட்டேல் அவர்கள் சென்னை வருகை சம்பந்தமாக ஆலோசிக்க நேர்ந்ததில், அதுபற்றி இயக்கத் திட்டம் ஏதும் இல்லை என்பதோடு, தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் அறிக்கையை இக்கூட்டம் ஏற்றுக் கொள்கிறது.

### வரவேற்பு; கோரிக்கை.

3. தென்னிந்திய ரயில்வேயில் நடத்தப்பட்டுவரும் உணவு விடுதிகளில், ஜாதி வித்தியாசமின்றி எல்லோரையும் எல்லா உத்தியோகங்களுக்கும், சமையல் பரிமாறுதல் வேலைக்கும் நியமிக்கலாமென்ற மத்திய அரசாங்க உத்திரவை இக்கமிட்டி வரவேற்கின்றது. மேலும், ரயில் நிலையங்களில் தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில் நடத்தப்படும் சிற்றுண்டி, உணவு விடுதிகளையும் சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

### பார்ப்பனர்களுக்குத் தனிச் சலுகை கூடாது.

4. திருப்பதிதேவஸ்தானக்கீழ்க் கலைக்கல்லூரியில், உடன் உண்ண மறுத்த பார்ப்பன மாணவர்கள், தனியாக உணவு கொள்வதற்காக உணவு சகாயத் தொகை கொடுப்பதாகச் சென்னை சர்க்கார் அனுமதிப்பதை இக் கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது.

5. தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலூக்கா வில்லியவாம்பல் கிராமத்தில் தை மாதம் 2-ந் தேதி திராவிடக் கழகக் கூட்டத்துக்கு வந்துகொண்டிருந்த இயக்கத் தோழர்கள் காங்கரஸ்காரர்களால் தாக்கப்பட்டு, படுகாயப்பட்டு ஆஸ்பத்திரியிலிருக்கும் இயக்கத் தோழர்களுக்கு, இக் கமிட்டி தன் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அரசாங்கத்தார் இது சம்பந்தமாக இதுவரை யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாததுபற்றி இக்கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது.

### வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

6. சென்னைமாகாணத்திலுள்ள மத்திய சர்க்கார் நிர்வாகத்திற்குட்பட்ட எல்லா அலுவலகங்களிலும், சென்னை சர்க்கார் அனுசரித்து வரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைப்படியாவது, உத்தியோகங்கள் வழங்கவேண்டுமாயும், அதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் இக் கமிட்டி மத்திய சர்க்காரை வற்புறுத்துகிறது.

★

# திருக்குறள் அறம்!

★

I.

தான, தருமம்; புண்ணியம் என்று வாய் ஓயாமல் சொல்லி, அதிலேயே தங்கள் மனதையும் சுழலவிட்டுத் தவிக்கும் நம் மக்களுக்கு, 'அறம்' என்றதும் 'தருமம்' என்ற நினைப்புத்தான் வரும். அத்துடன் தானம் செய்வது முதலியனவே தருமமாகும் என்ற எண்ணமும் தோன்றும். எனவே தான் அவ்வெண்ணத்திலேயே ஆழ்ந்து போய்விட்ட அவர்களுக்குத் தான தருமமே புண்ணியமாகத் தோன்ற, அறத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஆசை ஏற்படாது போய்விட்டது. அதுமட்டும் அல்ல, யாராவது ஆய்ந்து பார்த்து அதன்படி நடந்து, அந்தப் பிறர்க்கும் எடுத்துச் சொன்னால், அவ்வாறு சொல்பவர்களைக் கேலி செய்யவோ, தாழ்வாகப் பேசவோ, இழிவுபடுத்தவோ தயங்குவதும் இல்லை அவர்கள்! ஆனால் எப்பொருளையும் அப்படியே உணராது, அப்பொருளின் மெய்ப் பொருள் கண்டு; குணத்தையும், குற்றத்தையும் அளந்தறிந்து; தீதுநீக்கி, நன்றின்பால் நடக்க ஆசைப்படும் நமக்கு, வள்ளுவன் வகுத்த வழியில் செல்ல ஆசை தோன்றுவது இயற்கை. அறநூலாகிய திருக்குறள் அதற்கு ஏற்றதாகவும் இருக்கிறது.

அறம் என்றால் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை என்பதுதான் பொதுக்கருத்து. அது நியாயம், நேர்மை, நீதி, நெறி எனப்பல பெயர்களுடன் பல பிரிவுகளாக உலகில் வழங்குகின்றது. ஒரு தனிமனிதன் உலகுடன் தொடர்பு பெற்று வாழ்வதைத்தான், உலகம் இயங்குவதன் அடிப்படையாகக் காண்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு உயிரும் தொடர்பு பெற்று வாழாவிட்டால் உலகம் இயங்குகிறது என்பதற்குப் பொருள் இல்லாமல் போய்விடும். எனவே பகுத்தறிவு படைத்த மனிதனுக்கும், உலகுக்கும் உள்ள தொடர்புகளை, அறிவு வழி நின்று, ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும். அதற்கு மனிதனின் உள்ளம் நிலைக்களனாக இருக்கிறது, அறிவு வழிகாட்டியாக இருக்கிறது. இவற்றின் மூலம் 'அறவுணர்வு' என்ற கட்டுப்பாட்டை மனிதன் தனக்கு ஏற்படுத்திக் கொள்கிறான். உலகம் முழுவதும் எத்தனையோ உள்ளங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு உள்ளத்திலும் உலகமும் இருக்கிறது, அவ்வுள்ளத்தின் விரிவுக்கும், ஆழத்திற்கும் தக்கபடி குறைவாகவோ, நிறைவாகவோ, வெறும் கோடாகவோ! இத்தகைய உள்ளத்தைப் படைத்த மனிதன் அத்துடன் பகுத்தறிவையும் பெற்றிருக்கிறான். எனவே உலகை ஆக்குகின்ற, ஆள்கின்ற, நடத்திக்காக்கின்ற, அழிக்கின்ற செயல்களுக்

"அண்ணல்"

கெல்லாம் பெரும்பாலும் அவனே பொறுப்பாளி ஆகின்றான், இயற்கையின் குமுறல்கள் போக! தற்காலத்தில் விஞ்ஞான அறிவு மூலம் அந்த இயற்கையின் ஆற்றலையும் அடக்கியும், அடங்காதவற்றை அடக்கவும் மனிதன் முயற்சித்து வெற்றி கண்டு வருகிறான். எனவே அவன் எவ்வாறு வாழ்கின்றான் என்பதையும், எத்தகைய ஒழுங்கைத் தனக்கேற்படுத்திக் கொள்கிறான் என்பதையும் பொறுத்துத்தான் உலகின் இயக்கம் இருக்கிறது என்பது சொல்லாமலே அமையும். இது தனிமனிதனின் வேலை அல்லவே என்று கூறலாம். ஆனால் அவனைப் போன்ற அனைவரும் கூடிச் செய்யும் செயல் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே மனித வாழ்வு ஒழுங்கு பெற, ஒழுங்கு பெற உலகம் ஒழுங்கு பெறுகின்றது; மனித வாழ்வு தேயத்தேய உலகமும் தேய்கின்றது. இதன் காரணமாகத்தான் மனிதன் அறிவுடன் கூடிய கட்டுப்பாட்டை—அறத்தைத்—தனக்கேற்படுத்திக் கொள்ள வேண்டிய இன்றியமையாமை தோன்றிற்று. அதை அமைக்க மனிதனின் பகுத்தறிவு உதவிற்று.

இவ்வாறு 'மனிதன் செல்லும் வழி நோக்கியே உலகம் செல்கிறது, அது தீதாயினும், நன்றாயினும்' என்ற கருத்தைத்தான் 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று ஔவை கூறுகின்றாள். இத்தகைய கருத்து ஆண்களுக்கு மட்டுமன்றிப் பெண்களுக்கும் பொருந்துவதே என்பது தற்காலத்தில் நான் சொல்ல வேண்டியதில்லை. உலகத் தோற்றத்திலும், தொடக்க வளர்ச்சியிலும் தாய்மையிலேயே ஊறிப் பின்னடைந்திருந்த பெண்கள் சமுதாயம், இப்பொழுது முன்னேறிவிட்ட, முன்னேறுகின்ற காலம் அல்லவா இது. நிற்க,

உள்ளத்திற்கும், உலகத்திற்கும் ஏற்பட வேண்டிய நேர்மையான தொடர்பையும், ஏற்படக் கூடிய நேர்மையற்ற தொடர்பையும், அதை நீக்க வேண்டிய இன்றியமையாமையையும், நீக்கும் முறைகளையும் சொல்வதுதான் அறநூலின் இயல்பு. பூமி, சந்திரன், சூரியன் முதலிய கிரகங்களையெல்லாம் ஒன்றுடன் ஒன்று மோதி விடாதபடி பாதுகாத்து, ஒரே இடத்து நிலை நிறுத்தும், இழுக்கும் ஆற்றல்—ஆகர்ஷண சக்தி—எவ்வாறு உதவுகிறதோ அதுபோல, உலகம் அழிந்து விடாது நிலைநிற்க உள்ளத்திற்கும், உலகிற்கும் மோதுதல், சிதைவுகள் ஏற்படாதபடி தொடர்புபட, இடையே அறவுணர்ச்சி தோன்றி தீமையின்பாற் செல்லும் உலகை, நன்மையினின்றும் நழுவ விடாது காப்பாற்றுகின்றது. எனவே இந்த அறவுணர்வாகிய—ஆகர்ஷண சக்தியை வளர்ப்பது தான், உலகை நல்ல நிலையில் நிறுத்தவழி என்று தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்தார்கள். அதன் காரணமாகத் தமிழ் நாட்டில் அறவுணர்வு பற்றிய கருத்துக்கள் பெருகின. பல நூற்றாண்டுகளாக இந்நெறியிலேயே பண்பட்டு அதை—அந்த அறத்தை இலக்கியமாய், இலக்கணமாய், அகமாய், புறமாய் ஆய்ந்து ஆக்கிமகிழ்ந்த, பண்பட்ட தமிழ்நாட்டில்தான் வள்ளுவர் தோன்ற முடிந்தது. குறள் என்ற ஒப்பிலாச் செல்வத்தை ஆக்கி

அளிக்கமுடிந்தது.

ஆனால் பிற்காலத்தில் நம் நாட்டில் புகுந்த பிற நாட்டுக் "கலாச்சாரத்" தொடர்புகளின் காரணமாக நம் பண்பாடும் சிதைய 'அறம்' மாறுபட்டது. அறிவுக்குப் பொருந்தாத முறையில் 'தருமம்' என்ற பெயரில் மூடப்பழக்கம் வளர்ந்தது. அந்த மூடப்பழக்கங்களுக்கு மூலம்பூச இதிகாச, புராணங்கள் எழுந்தன. அதனால் நாட்டு மக்களின் கருத்திலே நஞ்சு நிறைந்தது. தானம் வாங்குவோர் நிறையவும், கொடுப்போர் குறையவும்; புண்ணியம் புகுந்து பாவத்தை வளர்க்கவும் இடமேற்பட்டது. கொடிய வழிகளில் பணம் சேர்த்தவன் கும்பாபிஷேகம் செய்து தருமகர்த்தா என்ற பட்டம் பெறவும்; வேறொருவனோடு கூடிக்குலவும் வீட்டுக்காரி, வேளைதவறாது கோயில் சென்று வருவது கண்டு, கணவன் நமக்கும் புண்ணியமுண்டு என்று களிப்படைய, அவள் செய்துவரும் பாவம் தீர்ந்துகொண்டே வருகிறது என்று திருப்தியடையவும்; காமத்தால் கற்பழித்தும், கண்டவருடனெல்லாம் கூடியும் திரிந்தகயவன் தேவாரம் ஓதினால், திருநீறு பூசினால் நோயும் போய்விடும், பாவமும் தீரும், சொர்க்கமும் எல்லோருக்கும் போலக் கிடைக்கும் என்று எண்ணவும் இடம் ஏற்பட்டது. போலி அறம்—அதுகூட அல்ல அறத்திற்கு முற்றிலும் மாறுபட்ட செயல்கள் அறத்தின் பெயரால் நடந்தன. தமிழ் அறம்-குறள் காட்டும் அறம் சிதைந்தது. மேலும் மேலும் சிதைய இதிகாச, புராணங்களைப் போற்றமட்டுமும், மான்யமும் நிறைந்தன; கோயிலும், குளமும்கூடின; அதற்கென்றே ஒரு கூட்டமும் பெருகியது! போதாதற்குத் தற்காலத்தில் சினிமா, நாடகக் கலைகளும் அவ்வழியிலேயே சுழன்றன! மக்கள் மனம் புண்ணியத்திற்கு இடம் கொடுத்தது! ஆனால் அதிலே அறம் சிறிதும் இல்லை! அறிவும் இல்லை! அது ஒரு மங்கிப்போன கண்போல ஆகிவிட்டது. குழியைக் கோபுரமென்று எண்ணி ஏற முயற்சித்து, படுகுழியிலே விழுந்து பரிதவிக்கும் நிலையிலே இருக்கிறது. இதை மாற்ற வழி இல்லையா! அறம் எங்கே?

அறம் உலகை ஏமாற்றும் செயல்களிலோ, உதவாத நம்பிக்கைகளிலோ நிச்சயமாக இல்லை. ஆனால் அது ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இருக்கிறது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் என்றால், முழுவதும் அல்ல! ஏனெனில் குற்றம் அடைதல்மன இயற்கையாதலினால், ஒவ்வொருவனும் எவ்வளவுதூரம் தன் மனத்தை குற்றமின்றிக் காப்பாற்றி வருகின்றானோ அவ்வளவு அளவிற்கு அவன் மனத்தில் அறம் இடம் பெறுகிறது. "மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்" என்கிறார் வள்ளுவர். எத்தகைய உண்மையை, எவ்வளவு எளிய முறையில் தெளிவுடன் கூறி இருக்கிறார் என்பதைப் பாருங்கள்! இந்த ஓரேவரி, குறள் அடியைக் கொண்டே குறள் 'அறநூல்' என்று தெளிவு படக்கூறலாம். அறத்தின் நிலைக்களனை உறுதியான முறையில் 'குற்றமற்ற மனமே' என்று கூறிவிட்டார்! சிலர் கோயில் கட்டுவதும், குளம் வெட்டுவதும், விழாநடத்துவதும், வேறுபல செய்வதும்தானே அறம் என்றால், அதற்கும் வள்ளுவர் பதில் கூறுகிறார். ஆகுல நீரபிற—பிறஎல்லாம் வெறும் ஆரவாரத் தன்மையை உடையனவே அன்றி உண்மையானவை அல்ல என்று மறுத்துவிடுகிறார். இத்தகைய அறத்தை அவர் தம்முடைய அறநூலில் எம்முறையில் கூறியிருக்கிறார் என்பதையும், அந்த அறத்தைப்பற்றிய அவருடைய பொதுப்படையான கருத்து என்ன என்பதையும் அடுத்த கட்டுரையில்காண்போம்.


---

## பிறப்பு.

★

மாயவரம் தாலூகா நத்தம் தோழர் பெ. மாணிக்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பத்மாவதி அவர்களுக்கு 16—2—49-ல் பெண் குழந்தை பிறந்தது. இதன் நினைவாக குடி அரசுக்கு நன்கொடை ரூ 1. [வரப்பெற்றோம், நன்றி!]

---




## பெரியார் இராமசாமி.

[தொகுப்பு நூல்]

[கிரவுன் 1/8 192 பக்கம் விலை ரூ. 1—12—0 கிடைக்குமிடம்:—ஞாயிறு நூற்பதிப்பகம், 28 அம்பலத்தாடு அய்யர் மடத்துத்தெரு, பாண்டிச்சேரி.]

சிந்தனைச் சிற்பி பெரியார் அவர்களைக் குறித்து, பலர் பல காலத்தில் கூறியவற்றையும் எழுதியனுப்பியவற்றையும் ஒன்றாகத் தொகுத்து, பெரியார் அவர்களின் 70வது ஆண்டின் நினைவாக வெளியிடப் பெற்றிருக்கிறது.

தாம் தாம் கண்ட பெரியாரவர்களைப் பற்றி வெளி நாட்டினரும், வடநாட்டினரும், திராவிடத்தின் நான்கு மொழியினரும் வெளியிட்டிருக்கும் கருத்துரைகள், படிப்பதற்குச் சுவையானவை மட்டுமல்ல, ஓரளவு பெரியாரவர்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்றே கூறவேண்டும்.

ஞாயிறு நூற்பதிப்பகத்தார் இவ்வெளியீட்டால், ஒரு பெருமையை நிலை நாட்டிக் கொண்டுவிட்டார்கள். நல்ல கிளேஸ் தாளில் 192 பக்கங்களோடு, அழகிய மூவர்ண ஆப்டோன் பிளாக்கிலுள்ள பெரியாரின் உருவம் முகப்பை அலங்கரிக்க வைத்து, அதன் விலை 1—12—0 தான் என்றால், மறுபதிப்பு எப்போது? என்கிற கேள்வி விரைவில் உண்டாகிவிடும் என்பதைக் கூறவா வேண்டும்.

## மாஸ்கோ பாதை.

எழுதியவர்:- டி. என். இராமச்சந்திரன். விலை ரூ. 1—8—0. கிடைக்குமிடம்:—இமயப் பதிப்பகம் நாகப்பட்டணம்.

பொதுவாக மாஸ்கோ பாதை என்றாலும், ஏகாதிபத்திய ஸ்டாலினை சர்வாதிகாரியாகக் கொண்ட இன்றைய மாஸ்கோவின் பாதையை விளக்க எத்தனிப்பது தான் இவ்வாசிரியரின் முயற்சி.

லெனின் பாதை வேறு, ஸ்டாலின் பாதை வேறு என்பதை அங்கங்கே நன்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஸ்டாலின் பாதை செத்து மடிய வேண்டிய பாதை என்பதை அழகாக, அழுத்தமாக வற்புறுத்துகிறார் இவ்வாசிரியர்.

இன்றைய மாஸ்கோவின் பாதையைப் படிப்பவர்களுக்கு, இன்றைய இந்திய யூனியனின் பாதை நிச்சயமாக நினைவுக்கு வரும். சத்தியம், அகிம்சை என்று பேசினாலும், ஏகாதிபத்திய ஸ்டாலின் பாதைக்கும் இந்திய யூனியன் பாதைக்கும் இம்மியும் வேறுபாடில்லை என்பதையும் இது உணர்த்தத் தவறவில்லை.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

ரங்கன் பத்திரிகைகளிலிருந்து படித்துச் சொல்லுவான். அதை வாயில் ஈ புகுவதுகூடத் தெரியாமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள். சிலர் தங்களின் உறவினர்கள் என்ன ஆனார்களோ என்று அழுது புலம்புவார்கள்.

குப்பாயி இப்பொழுது பெரியவளல்லவா? அவைகளையெல்லாம் தெரிந்து கொள்ளாமலா இருந்திருப்பாள்? அப்படி அவதிப்படுகிறவர்களில் தன் புருசனும் ஒருவன் என்பதை அவள் எப்படி மறந்துவிட முடியும்? மறக்காமலிருந்தாலும், வருவானென்ற நம்பிக்கையில்லாததால் நாளுக்கு நாள் சிறிது சிறிதாக இருந்த சிறு நம்பிக்கையும் மறைந்துவிட்டது.

குப்பாயி இப்பொழுது பதினாறு வயது பருவ மங்கையல்லவா? ஏழையாக இருந்தாலும் பருவத்திற்கேற்ற பண்பு கொஞ்சங்கூட இல்லாமலா போய்விடும்? வறுமையின் காரணமாக வாழ வேண்டுமென்ற எண்ணமும் இயற்கையுணர்ச்சியும் இல்லாமலே போய்விட வேண்டுமா?

ஒரு வாலிபனுக்கு சமைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் குப்பாயி என்னதான் கள்ளங்கபடமற்றவளாக இருந்தாலும், ஊரிலுள்ளவர்கள் வாயை வைத்துக்கொண்டு சும்மாஇருந்து விடுவார்கள் என்று கூறுவதற்கு யாருக்கு தைரியமிருக்கிறது? வதந்தியைக் கிளப்புகிறவர்கள் வாத்தியாரைப் பற்றியும் குப்பாயியைப் பற்றியும் ஒன்று கூறுவதற்கு மறந்துவிடவில்லை. "வாத்தியார் கெடுத்துவிட்டான் குப்பாயியை" என்று கூறாமலிருக்க அவர்களுக்கு என்ன பைத்தியமா?

ஊரிலே எந்தவிதமான வதந்திகள் கிளம்பிக் கொண்டிருந்தாலும் குப்பாயி மட்டிலும் பாண்டுரங்கன் பள்ளியிலிருந்து வரும்போது முகமலர்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பதில் தவறுவதில்லை. ஆனால் இரு இள உள்ளங்களிலும் எழுந்து கொண்டிருந்த உணர்ச்சி அலைகள், எல்லையற்ற நிலையிலிருந்தன வென்பதை அறிந்து எப்படிப் பரிமாறிக் கொள்வது?

* *

வசந்த காலத்தைப்பற்றி கவிகள் எவ்வளவோபுகழ்ந்து எழுதுகிறார்கள். அந்தக் காலத்தில் எவ்வளவோ காரியங்கள் தானாகவே இயங்கி விடுகின்றனவாம்! இயற்கை தன்முழுத்திறமையையும் காட்டி உயிர்வாழ் இனங்களை மகிழ்விப்பதும் அந்தக் காலத்தில் தானாம்! ஆம்! அந்தக் காலத்தில்தான் பாண்டுரங்கன் குப்பாயி இவர்களின் வாழ்விலும் ஒரு பெரிய புரட்சிகரமான மாறுதல் (?) ஊராரின் வதந்திகளுக்குப் பயந்த காலம் மலையேறிவிட்டது. உலுத்தர்களின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்த காலம் சென்று விட்டது. இன்று அவர்களின் வாழ்க்கையிலே இன்ப வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஒருவருக்கொருவர்கூட சொல்லிக் கொள்ளாமலேயே திருமணம் செய்து கொண்டு விட்டனர். திருந்திய திருமணத்தில் அவ்வளவு முன்னேற்றம்?

எழுத்து என்பதே இன்னதென்று அறிந்திராத குப்பாயி இப்பொழுது எழுதப்படிக்கக்கூடக் கற்றுக்கொண்டாளாம்! இதற்கிடையில் ஊரில் எவ்வளவோ அமளி துமளி!

வெளிப்படையாக, பாண்டுரங்கன் குப்பாயி இவர்களின் காதில் விழாத வார்த்தைகள் இப்பொழுது கண்ணெதிரிலேயே காதில் விழுந்தன. "குப்பாயிவாத்தியாரைச்சேத்திக்கிட்டாள்: வாத்தியாரின் கூத்தியாள் குப்பாயி" இதைக் கேட்டுக்கேட்டு அவர்களுக்குச் சரியாகப் போய் விட்டது

இடையில் சிலவாண்டுகள். பாண்டுரங்கன், குப்பாயி இவர்களின் வாழ்க்கைப்பாதையிலும் எவ்வளவோ பள்ளங்கள், மேடுகள், சுளிவு சுழிவுகள் தோன்றி சரிப்பட்டு விட்டன. ஆனால் ஊரார் இவர்களைப்பற்றி ஒருவிதமான மாறுதலையும் ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை!

எட்டு ஆண்டுகள் ஒருவனுடன் தன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டு விட்டு இரண்டு குழந்தைகளைப் பெற்ற பிறகுகூட மனைவி என்று சொல்லிக் கொள்ள உரிமையில்லையா? என்ன? பாழும் உலகம் அவளை மனைவியாக்கவே விரும்பவில்லை. கூத்தியாளாகத்தான் ஆக்கிவைத்திருக்கிறது. இன்னும் இது எத்தனை காலத்துக்கோ தெரியவில்லை.

ஏ உலகமே! குப்பாயி போன்றவர்கள் எத்தனை காலத்திற்கு இதே நிலையிலிருக்கவேண்டும் என்று பிரியப்படுகிறாய்? கூத்தியாளாகவே தானிருக்கவேண்டுமா? அதற்கு முடிவில்லையா? அதைக்கூற உனக்குத்தான் சக்தி ஏது? இருந்தால் நீயும் எவ்வளவோ சாதித்திருப்பாயே!

---

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மாதிரி எனக்கு நூறு நூறாய்க் கொண்டு வந்து கொடுக்க விரும்புகிற உங்கள் உயிரை எமனே வந்து பிடித்துக் கொண்டு போனாலும் விட்டுவிடுவேனா...? சாவித்திரி வேஷம் போட்டேனும் உடனே கைலாசத்திற்குச் சென்று அந்த எமனோடு வாதாடிச் செயித்து உங்கள் உயிரை மீட்டிக்கொண்டு வந்துவிடமாட்டேனா...?

வேவா:-எமன் எருமைக்கடாய் மீது ஏறிக்கொண்டு என்கிட்டே வருவதற்குள் நான் ஏரோப்ளானில் ஏறி ரஷ்யாவில் போய் இறங்கிவிடுவேன்! அங்கே இந்த எமனும் வரமுடியாது அகால மரணமுங் கிடையாது! ஆனால், இப்போதிங்கே ரஞ்சன் வந்தால், அவனுடைய துப்பாக்கிக் குண்டுக்குத் தப்ப முடியாதே...?

கமலா:-நீங்க ஒரு பைத்தியம்! ரஞ்சன் ரஞ்சன் என்று அஞ்சுறீங்க! அவன் இந்நேரம் சப் இன்ஸ்பெக்டர் காலில் விழுந்து நாயாட்டம் கெஞ்சிக்கிட்டிருப்பான்!

வேவா:-கமலா! என்னிடம் பொய்தானே சொல்கிறே? ரஞ்சனாவது! சப் இன்ஸ்பெக்டர் காலில் விழுந்து கெஞ்சுகிறதாவது...? எல்லாம் சுத்தப் பொய்.

கமலா:-அய்யோ! உங்களிடம் பொய் சொல்வேனா...? [நூறு ரூபாய் நோட்டைக்காட்டி] இந்த லெட்சுமியைக் கையில் வைத்துக் கொண்டு சொல்கிறேன்! ரஞ்சன் ஒரு சோம்பேறி; சோதாப்பயல்; அவன் விஸ்வனை நயவஞ்சகமா கப்பேசி இங்கே அழைத்துக் கொண்டு வந்து கோழைத்தனமாய் மறைந்திருந்து சுட்டுவிட்டு, யாரோ ராஜன் என்பவன் மேல் பழி சுமத்தி விட்டான்; அதற்காகச் சப் இன்ஸ்பெக்டர் தயவைத் தேடி நாய் போல அவர் பின்னாலேயே சுற்றிக்கொண்டு திரிகிறான்; இங்கே வரவேமாட்டான்! நீங்கள் அவனுக்காகக் கொஞ்சமும் பயப்படவே வேண்டாம்.

வேவா:-[ஒரு சீட்டியடிக்கிறான்.]

சர்க்கிள் இன்ஸ்பெக்டர்:-[போலீஸ் பின்தொடர எதிரில் வந்து] டேய்! 4809. இந்த அம்மாவை அழைத்துக்கொண்டு நேரே கோர்ட்டுக்குவாடா!

போலீஸ்:- எஸ் சார்!—[கமலாவைநோக்கி] உம். நடங்க அம்மா...

கமலா:- [போலீஸோடு போகிறாள்]

சர்க்கிள்இன்ஸ்பெக்டர்:- மிஸ்டர் வேவா! 'தாங்க்யூ வெரிமச்'

வேவா:- 'நோமென்ஷன்',

[என்று கூறிக்கை குலுக்கிச் செல்கின்றனர்.]

காட்சி 38.

[சாலை.]

உறுப்பினர்:- புரட்சிக்கவிஞர்.

கதை அமைப்பு:- [புரட்சிக் கவிஞர் ஒருவர் புரட்சிகாமான கவிதையைப் பாடிக்கொண்டே செல்கிறார்.]

புரட்சிக்கவிஞர்:- (17) [பாட்டு 'அபுத்தேரேசிவா...என்றமெட்டு]

பகுத்தேயறிவாய் பாரினிலொரு
பரம்பொருள் பொய்யே
அறிவால் அறியாமை
அழித்தாவன செய்யே...(ப)
பாழான மூடர் பலியும் மீதர்
திருவிழாக்களும்
கீழான கயவர் செயலே ஆரியர்
விழாக்களாம்.
புரியாததோ ஆதிமுதல்
வேதியர் சூழ்ச்சி
அறிவால் அறியாமை
அழித்தாவன செய்யே...(ப)
பாராளராம் தன்மானம் நிறை
வீரத்திராவிடர்
பாரீர் சரிதம் கூறும் பண்பாடு
திறம்பட
அதை ஆரியம் அழித்திட
மதிநீங்கிச் சதி ஓங்கி விதி
தாங்கி முந்நாள்
தமிழா கவிழ்ந்தாய்! தமிழா...
கவிழ்ந்தாய்!!
இனிமேல் அறியாமை
அழித்தாவன செய்யே...(ப)

காட்சி 39.

[நீதிமன்றம்.]

உறுப்பினர்:- நீதிபதி, வக்கீல், போலீஸார், ஜூரிகள், பெஞ்ச் கிளார்க், இராஜன், இரஞ்சன், இராகவன், ஆடிட்டர், முதலியார், வேவா, தாசிகமலா, பிராசிக்யூட்டர்.

கதை அமைப்பு:- [உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படுகின்றனர். இராஜன் விடுதலையடைகிறான்.]

பிராசிக்யூட்டர்:- '...ஆகவே, 'யுவர் ஆனர்' நான் இதுவரையில் எடுத்து விளக்கியதிலிருந்து தெளிவாகக் கூடிய உண்மைகளாவன:-

நடேசாமில்லுக்குச் சொந்தக்காரராகிய சிதம்பரமுதலியாரின் மருமகனும், நடேசாமில்லுக்கு மானேஜிங்டைரக்டருமாகிய கொலையுண்ட விஸ்வனுக்கும், அதே மில்லில் வேலைபார்த்துக் கொண்டிருந்தவனும், கொலையுண்டவிஸ்வனால் களவுக் குற்றம் சாட்டப்பட்டு 'ரிமாண்டில்' இருந்தவனும், விஸ்வனுடைய நீண்டகாலப் பகைவனுமாகிய இராஜனுக்கும் இடையே ஏற்பட்டுள்ள குரோதம் முற்றியமையால், இராஜன் தன்னுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள விஸ்வனைத் தாசிகமலா வீட்டில் 'ரிவால்வ'ரால் சுட்டுவிட்டு ஓடிப்போய்விட்டான் என்பவைகளேயாகும்.

நீதிபதி:- இந்த வழக்கில் அந்த தாசி கமலாவை ஏன் ஒரு சாட்சியாகப் போடவில்லை?

பிராசிக்யூட்டர்:- 'யுவர் ஆனர்!' அந்த தாசி கமலாவீட்டில் அப்போதிருந்த எல்லா ஆடவர்களும் இவ்வழக்கில் சாட்சியாக விளங்குவதால், வீணே ஒரு பெண்ணுக்கும் தொந்தரவு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றே விட்டுவிட்டோம்.

நீதிபதி:- அப்படியானால், அத்தாசி கமலாவின் சாட்சியம் அனாவசியமானதென்று கருதுகிறீரா?

வேவா:- [அதே சமயத்தில், தாசிகமலா, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் போலீஸ் முதலானோருடன் பிரவேசித்து]

'யுவர் ஆனர்'! இதோ அந்தத் தாசி கமலா! இவ்வம்மையின் சாட்சியமே மாட்சிமை மிக்க கோர்ட்டாரவர்கள் நீதி வழங்குவதற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

பிராசிக்யூட்டர்:- [திடுக்கிட்டுப் பிறகு சமாளிப்புடன்] 'யுவர் ஆனர்!' இந்த அசம்பாவிதமான சாட்சியத்தை இப்போது இங்கு கொண்டு வந்து புகுத்துவதினால், இதை ஆட்சேபிக்குமாறு மாட்சிமை மிக்க கோர்ட்டாரவர்களை நான் மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

நீதிபதி:- [கோர்ட்டில் ஏற்பட்ட அமைதி இன்மையை அடக்கிவிட்டு; வேவாவை நோக்கி] நீங்கள் யார்?

வேவா:- 'யுவர் ஆனர்!' நான் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தன்! என்பெயர் வேவா! இந்தக் கொலை வழக்குச் சம்பந்தமாக எனக்குக் கிடைத்த பல குறிப்புகளிலிருந்தும், ரிகார்டுகளிலிருந்தும் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நிரூபிக்கவே, நான் இங்கு வந்திருக்கிறேன். [என்று கூறி ஒரு கட்டுக் கடிதாசிகளை நீதிபதியிடம் சமர்ப்பிக்கிறார்.]

நீதிபதி:- [அவைகளை வாங்கிப் பார்க்கிறார்.]

இரஞ்சன், இராகவன், ஆடிட்டர் [மூவரும் நழுவ முயல்கின்றனர்]

கமலா:- அய்யோ! அதோ அந்தக் கொலைகாரப் பாவிப்பயல்கள் ஓடப்பாக்கிறானுங்கள்...!

சர்க்கிள் இன்ஸ்பெக்டர்:- ஏ 4809! அவர்களை விடாதே!-யுவர் ஆனர்! இரஞ்சன், இராகவன், ஆடிட்டர், சப் இன்ஸ்பெக்டர் இந்நால்வரும் இக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறபடியால் இவர்கள் இங்கிருந்து தப்பி ஓடிவிடாதபடி காவல் புரிய அனுமதிக்குமாறு கோருகிறேன்!

நீதிபதி:- 'எஸ்' [Yes]

சர்க்கிள் இன்ஸ்பெக்டர்:- ஏ 1949! நீயும் அவர்களை எல்லாம் எச்சரிக்கையாகக் காவல்புரி.

போலீஸார்:- [அந்நால்வரையும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிற்கும் கூண்டில் ஏற்றுகின்றனர்.]

பெஞ்சி கிளார்க்:- [தாசி கமலாவை நோக்கி] அம்மா! நீங்கள் இந்தக் கூண்டில ஏறுங்கள்!

கமலா:- [கூண்டில் ஏறிநிற்கிறாள்]

பெ. கிளார்க்:- அம்மா! நான் சொல்லுகிறபடி சொல்லுங்கள். எல்லாம் வல்ல.

கமலா:- எல்லாம் வல்ல.

பெ. கிளார்க்:- சர்வேஸ்வரன் ஆணையாக.

கமலா:- சர்வேஸ்வரன் ஆணையாக.

பெ. கிளார்க்:- நான் சொல்லுவதெல்லாம்.

கமலா:- நான் சொல்லுவதெல்லாம்.

பெ. கிளார்க்:- சத்தியமே தவிர.

கமலா:- சத்தியமே தவிர.

பெ. கிளார்க்:- வேறொன்றுமில்லை.

கமலா:- வேறொன்றுமில்லை.

எதிரி வக்கீல்:- உங்கள் பெயரென்ன?

கமலா:- கமலாபாய்.

எதிரி வக்கீல்:- தொழில்?

கமலா:- நாட்டியம் ஆடுவது.

எதிரி வக்கீல்:- இந்தக் கொலை வழக்குச் சம்பந்தமாக உங்களுக்கு என்ன தெரியும்?

கமலா:- என் வீட்டில் நான் நாட்டியம் ஆடியதை ரசித்துக் கொண்டிருந்த விஸ்வனை இரஞ்சன் சுட்டுக் கொல்லும்போது, நான் என் கண்ணாரக் கண்டேன்.

எதிரி வக்கீல்:- (All R[illegible]t) 'ஆல் ரைட்' [அமர்ந்துவிடுகிறார்.]

பிராசிக்யூடடர்:- [திடீரென்று எழுந்து] ஏனம்மா! உனக்கு... ரஞ்சனுக்கும், ராஜனுக்கும் உள்ள வித்தியாசம் தெரியுமா?

கமலா:- தெரியும்.

பிராசிக்யூட்டர்:- எப்படி?

கமலா:- இராஜன் யாரோ ஒரு நிரபராதி! இரஞ்சனோ! எனக்கும் விஸ்வனுக்கும் இடையே மாமா விர்க உத்தியோகம் செய்ய ஆரம்பித்துத் திடீரென்று கொலைகாரனாக மாறிய சண்டாளப் பாவி!

பிராசிக்யூட்டர்:- [மேலும் கேள்வி கேட்க முடியாதவராய் நிற்கிறார்.]

நீதிபதி:- சார்! மேலும் ஏதாகிலும் குறுக்கு விசாரணை செய்யப் போகிறீர்களா?

பிராசிக்யூட்டர்:- 'நோ யுவர் ஆனர்' [No Your Honour] [என்று கூறிவிட்டு அமர்கிறார்]

நீதிபதி:- [குற்றவாளிகளை நோக்கி] உங்கள் மீது இவ்வம்மையார் சாட்டும் குற்றங்களை ஆட்சேபித்து நீங்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

குற்றவாளிகள்:- [இல்லை என்பதற்கறிகுறியாகத் தலையை ஆட்டுகின்றனர்.]

நீதிபதி:- மிஸ்டர் வேவா! நீர் இன்னும் ஏதாகிலும் கூற விரும்புகிறீரா?

வேவா:- 'எஸ் யுவர் ஆனர்!' [Yes Your Honour] தங்கள் முன்னிலையிலிருக்கும் 'ரிவால்வர்' உண்மையாக இராஜனுடையதல்ல, இரஞ்சனுடையதுதான் என்பதை ரிகார்டு நெம்பர் 22 மூலம் அறியலாம்! என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிபதி:- துப்பறியும் உத்தியோகஸ்தர் மிஸ்டர் வேவாவினால் மிகவும் திறமையாகக் கண்டுபிடிக்கப்பட்டு இங்கு சமர்ப்பிக்கப்பட்ட உண்மையான ரிக்கார்டுகளிலிருந்தும், தாசி கமலாவின் சாட்சியத்திலிருந்தும், இராஜன் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டுவிட்டமையால் நான் இராஜனை இன்றே விடுதலை செய்கிறேன்; புதிய குற்றவாளிகளாக இன்று கண்டு பிடிக்கப்பட்டவர்களுக்கு நாளை நீதி வழங்கப்படும்; இத்துடன் இக்கோர்ட் கலைகிறது.

இராஜன்:— [கூண்டிலிருந்து வெளியேறிப் பாய்ந்து சென்று] வேவா......!

வேவா:- ராஜ்......!! [இருவரும் ஒருவரை யொருவர் மிகவும் ஆர்வத்துடன் ஆலிங்கனம் செய்து கொள்கின்றனர்.]

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காரணத்தால், கிராமமக்கள் அவைகளுக்குப் பயந்து கொடைபோட்டுக் கொடுப்பார்கள். ஒரு அம்மனுக்கு ஒரு நோயை மக்களுக்குள் அனுப்பவும், மற்றொரு அம்மனுக்கு அந்த நோயை வரவிடாமல் தடுக்கவும் சக்தியுண்டாம்! இதனால் அம்மன்களுக்குள் சில சமயம் சண்டைகளும் வந்து விடுமாம்! வைசூரிநோயை வரவிடுகிற அம்மனுக்கு 'சீதளதேவி' என்று வடநாட்டிலும், மாரியம்மன் (மரணதேவதை) என்று தென்னாட்டிலும் கூறுவார்கள். இதுபோலவே சீனமக்களும் வைசூரி என்னும்நோய் ஒரு தேவதையால் உண்டாகிறதென்று நம்பிவந்தனர். இதற்கு ஆதாரமாக ஈண்டு ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

### சீனாவில்

சிலகாலத்துக்கு மூன்பு சீனநாட்டை ஆண்டுவந்த சீனசக்கரவர்த்தியிடம் அம்மன் விளையாடத்தொடங்கியதும், அவளைச் சமாதானப்படுத்தப் பல முயற்சிகள் எடுத்து, ஏராளமான செல்வங்களைச் செலவுசெய்து, அந்த அம்மனைப்போன்ற உருவம் செய்வித்து பீக்கின் பட்டணத்துத் தெரு வழியே ஊர்வலம் நடத்தி, சக்கரவர்த்திநோயுற்று இருந்த அறைக்குள் கொண்டுவந்து, மன்னவனுக்காக வேண்டிக்கொண்டு வணங்கி, சக்ரவர்த்தியின் உயிருக்காக மன்றாடினர்—கெஞ்சினர். இருந்தும் அம்மன் தனது விளையாட்டை நிறுத்தாமல் சக்கரவர்த்தியை 'நமனுலகு' அனுப்பி விட்டாள். துயர்தாளாத மக்கள் கோபங்கொண்டு, அம்மனை ஏசித்திட்டி அவளது விக்கிரகத்தை உடைத்து நொறுக்கி எறிந்து விட்டார்கள். இது சீனத்திலே நடந்த சம்பவம்!

அம்மன்களுக்கு இரத்தப்பலியிடாவிட்டால் மக்கள் எந்த நோய்க்கு அஞ்சுகிறார்களோ அந்நோயை அம்மன்கள் அவர்கள் மீது வரவிடுவார்கள். இத்தகைய நியதி ஏற்படுத்திய சண்டாளி-குருடி-நயவஞ்சகிகள் தான் இத்தேவதைகள் என்றால் அத்தகைய நாசகாரத்தேவதைகளுக்கு 'கல்தா' கொடுக்க வேண்டியதுதானே அறிவுடைமை! இத்தகைய மூடபக்திக்கு மூலகாரணமாய் இருக்கும் தேவதைகளுக்கு சாவுமணியடித்து, சாவோலைதீட்டி, சமாதிகட்டுவதுதானே நியாயம்!

இந்த நாட்டிலே ஆண்டுதோறும் சராசரி வைசூரியினாலும், விஷபேதியினாலும் சுமார் 300,000 பேர் வரை உயிர்துறக்கிறார்கள். 'வாக்சிநேஷன்' எவ்வளவுக்கெவ்வளவு விருத்தியடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இந்நோய்களாலுண்டாகிற சாவும் குறையும். இதனை அறியாத பாமரமக்கள் 'இனாக்குலேஷன்' செய்து கொண்டால் தங்களுடைய தேவதைகள் கோபித்துக் கொண்டு தங்களுடைய குடும்பத்தையே நிர்மூலமாக்கிவிடும் என்று பயந்து, வாக்சினேட்டர்களைக் காணும் பொழுது வீட்டிற்குள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். இது எவ்வளவு அறிவின்மையைக் காட்டுகிறது!

### மாரியம்மன் கதை!

அசுத்தத்தின் தேவதை மாரியம்மனாம்! இதைப்பற்றிய "வரலாற்றைச்" சிறிது கவனிப்போம்.

"கருவூர் பெரும் பறையனின் மகளாகிய ஆதி என்பவளுக்கும், பேராழிமா முனிவன் மகன் பகவன் என்ற பார்ப்பனனுக்கும் நான்கு பெண்களும் மூன்று ஆண்களும் பிறந்தனர். இவர்களைப் பற்றி ஊரார் கேவலமாகப் பேசவே, ஊரைவிடுத்து இவர்கள் காட்டில் சஞ்சரிக்க வேண்டியதாயிற்று. அதனால் மூத்த பெண் உப்பை என்பவள் ஊற்றுக் காட்டிலே வண்ணார் வீட்டிலும், 2-வது பெண் உருவை சாணார் வீட்டிலும், 3-வது பெண் அவ்வை நரப்புச்சேரிப்பாணரிடத்திலும், 4-வது பெண் வள்ளி மலைக் குறவரிடத்திலும், 5-வது, 6-வது பிள்ளைகள் வெவ்வேறு மரபிலும், 7-வது மகன் வள்ளுவன் தொண்டமண்டலத்து மயிலாப்பூரிலே பறையர் வீட்டிலுமாக வளர்ந்து வந்தார்கள். உப்பை என்ற மூத்த பெண் வெட்டியாரப் பறையனுக்கு வாழ்க்கைப்பட்டு, வறுமையுடன் கூடிய வாழ்க்கை நடத்திவரும் காலத்தில், அவளுக்கு வைசூரி நோய் கண்டு, உடலெங்கும் ரணமாகி நாற்றமெடுத்து ஈக்கள் மொய்த்தபடியால்-போர்த்துக் கொள்ள ஆடையின்மையால், அவளது கணவன் வேப்பந்தழைகளைக் கீழே பரப்பி அதன்மேல் அவளைப் படுக்கவைத்து, அந்த இலைகளையே அவள் உடலில் இருந்த புண்களில் ஒட்டி வைத்தான். ஊருக்குள் சென்று பிச்சையெடுத்துக் கிடைத்த உணவை அவளுக்கு அளித்து வந்தான். சிறிது நாளில் அவளுக்குச் சற்று குணமா

ரோஜா முத்தையா

கவே, அவள் தன் உடலிலுள்ள புண்களில் ஈக்கள் மொய்க்காதபடி வேப்பிலைகளை ஒட்டி, தன் கையிலும் வேப்பிலைகளை வைத்து ஈ மொய்க்காதபடி விசிறிக் கொண்டு, அவளும் ஊருக்குள் சென்று இரந்துண்ண ஆரம்பித்தாள். மக்கள் அவளைக் காணும் பொழுதெல்லாம் அவளை வெறுத்து ஒதுங்கிக்கொள்வார்கள்—அவ்வளவு துர்நாற்றம் வீசிற்று அவள் உடலில்! அவளுடைய கோரமான உருவத்தைக் காணும் பிள்ளைகள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். இதனால் அவளுக்கு நோய் என்று அர்த்தங்கொள்ளுகிற மாரி என்றும், உடலில் தழும்புகளுள்ளவளென்று அர்த்தங்கொள்ளுகிற வடுகி என்றும் காரணப் பெயர்கள் உண்டாயின" இப்படி ஒரு கதை சொல்லப்படுகிறது.

## அம்மன் அடியார்களே!

அறியாமையிலேயே மூழ்கியிருந்த மக்கள், நாளடைவில் இந்தப் "பாட்டி கதையைக்" கேள்வியுற்று வைசூரி நோயை வரவிடுகிறவள் உப்பையாகிற மாரியம்மனென்றும், வேப்பிலைகளை அந்த நோயாளிகள் வீட்டில் போட்டிருந்தால் அம்மன் விளையாட்டு அமருமென்றும் நம்பி வந்தனர். அன்று அவர்களது அறியாமையில் முளைத்த—அந்தப்பாட்டிக்கதையில் தோன்றின கதையின் கதாநாயகியே பிற்காலத்தில் மாரியம்மன் என்று அழைக்கப்பட்டாள். வேப்பிலைகளுக்கு அஞ்சும் தேவதை, வேப்பமரத்தில் வாசம் பண்ணுமாவென்று சிந்திப்பதேயில்லை இந்த மூடாத்மாக்கள! வைசூரி நோய் அம்மனது விளையாட்டால் உண்டாவது என்று கூறும் அம்மன் அடியார்களே! அம்மன் விளையாடுகிறதாலேயே அவளுடைய பிள்ளைகள் கண், காலை யிழந்து உயிர் நீங்கி சொர்க்கத்திற்குப் போகிறார்கள் போலும்! அந்தஅம்மையின் விளையாட்டே இத்தன்மையது எனில், அவள் கோபங்கொண்டு சண்டையிடத் தொடங்கிவிட்டால் எவ்வாறாகுமோ! நல்ல தழும்புகளுண்டாகும்படி 7 ஆண்டுக்கொரு முறையாக 3 தடவைகள் 'இனாக்குலேசன்' செய்து கொண்டவர்களிடம் அம்மன் விளையாடமாட்டேன் என்று சொல்லுகிறாளே! ஏனோ? ஒரு வேளை 'வாக்சினேட்டர்களுக்கு' அம்மன் பயப்படுகிறாளோ? இதைப் பற்றிச் சிந்திக்கும் திறனற்ற-மக்களை மாக்களாக்கும் மதிவாணர்களே! இனியாவது இவற்றிற்கு மண்டியிடாதீர்கள்! மடமையை மடியச்செய்யுங்கள்!

## நாடு உருப்படுமா?

"கிராமமே நாட்டின் உயிர் நாடி, கிராம முன்னேற்றமே நமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்" என்று பறைசாற்றி வருகிற காங்கிரஸ் மந்திரிகள், வெறும் வாய்ச்சொல்லில் வீரராக இருக்கின்றனரேயன்றி மூடநம்பிக்கையை ஓட்டியடிக்க, அறியாமை அந்தகாரத்தை அகற்ற, சிந்தனையின் செந்தீயை எங்கும் பரப்ப ஆவன செய்ய முற்படவில்லை. எத்து வேலை செய்து பிழைக்கும் பண்டார-பரதேசி—புரோகிதக் கும்பல்களுக்குத் தான் இந்த நாட்டில் வாழ்வு—வசதியெல்லாம்!

இந்த நாட்டிலே உள்ள மக்களுக்கு சிந்திக்கும் சக்தி ஏற்படாதவரை, அறிவு வளராதவரை இத்தகைய மூடபக்தியின் பேரால் பூசாரிகளின் 'பிசினஸ்' நன்றாக நடைபெற்றே தீரும். இதற்குத் துணை செய்வோர் தொகையோ நாட்டிலே ஏராளம்! இதனை ஆதரிக்கும் பிற்போக்குக் கும்பல்களோ கூட்டங் கூட்டமாக உள்ளன நாட்டில்! மேலும் இவையன்றி ஆளவந்தார்களின் ஆதரவும், அதிகார வர்க்கத்தின் சலுகையும் இதற்குப் பக்கபலமாக இருப்பதை நோக்கும் பொழுது இந்த நாடு உருப்படுமா? என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

"இந்த நிலை இன்னும் நீடித்திருக்கலாகாது-நாட்டிலே நிலவக் கூடாது' என்று நாங்கள் கூறினால் எங்கள் மீது சீறிவிழுகிறார்கள், சிந்திக்கும் சக்தியற்ற சிற்றறிவாளர்கள்! "நாட்டு முன்னேற்றத்தில் எங்களுக்கு அக்கறையே கிடையாதோ-இவர்களுக்குத் தான் அக்கறையோ? அரசாங்கத்தைக் கவிழ்க்க இவர்கள் சதிசெய்கிறார்களய்யா!" என்று சென்றவிடமெல்லாம் முழக்கமிடுவதே தங்கள் கடமையாகக் கொண்டுள்ளனர், நமது மதிமிக்க மந்திரிகள்! செயலாற்ற மட்டும் முன்வருவதில்லை.

## இன்பபுரிக்குத் துணை இவற்றை யொழிப்பதே!

தேவதைகளைத் தொழும் பெரிய தொத்து நோய் கிராமங்களிலே நீடித்து நிலவும்வரை கிராமங்கள் உருப்படப் போவதில்லை. நாட்டின் நல்லறிவாளர்கள் இதில் நாட்டம் செலுத்த வேண்டும். கிராமங்கள் முன்னேற வேண்டுமானால்—கிராம மக்கள் நல்லறிவு பெற்று உயர் நிலை பெறவேண்டுமானால் அவர்கள் இத்தகைய—மனிதர்களை காட்டுமிராண்டி காலத்திற்கு அழைத்துச் செல்லுகிற கிராமதேவதைகளை வழிபடும் கொடிய பழக்கத்தை விட்டொழிக்கவேண்டும். இத்தகைய அறியாமைக்கு அடிகோலும்—வித்திடும் வழிபாடுகளுக்குக் காப்பளிக்கும் பிற்போக்குக் கும்பல்களும், அறிவுக்குத் திரையிடுகிற குள்ளநரிச் செயலும் ஒழிக்கப்பட்டாலொழிய, இவைகளை ஆதாரமாக வைத்து 'பிஸினஸ்' நடத்தும் சுயநலவாதிகள் ஒழிக்கப் பட்டாலொழிய, நோய் தேவதைகளால் அனுப்பப்பட்ட தண்டனை என்கிற நம்பிக்கை போய், 'இன்னகாரணத்தால் நோய் உண்டாயிற்று என்று மக்கள் சிந்திக்க ஆரம்பித்தாலொழிய கிராமங்கள் முன்னேற்றமடைய மார்க்கமே கிடையாது. பழமையிலேயே நம் நாட்டுக் கிராமங்கள் மூழ்கிச்சிதைவுற வேண்டியதுதான்.

ஒவ்வொரு கிராமத்தாலும் "நாம் இன்னும் காட்டுமிராண்டிக் காலத்தவர்களல்ல—பகுத்தறிவொளிபரவ ஆரம்பித்து விட்டது, இனி மடமைச் சேற்றிலாழ்த்தும் இந்தத்தேவதைவழிபாடுகள் வேண்டாம்" என்று உணரவேண்டும். அதற்கான நல்லதிட்டங்கள் பல வகுக்க இளைஞர்கள் ஏராளமாக முன்வரவேண்டும்.

இத்தகைய கிராம தேவதைகளின் ஒழிப்புப்போன்றவைதான் நாம் விரைவில் இன்பபுரியை அடைய அரும்பெரும் துணையாய் இலங்கும் எனவேதான் இவைகள் ஒழியட்டும், ஒழியட்டும் என்று நாவலிக்கிறோம்!

தனமனோகரன்.

## அறிவிப்பு.

அகில மலாயா திராவிடர் கழக முன்னாள் தலைவரும், (மலாயா) பங்ஸிங்கில் பிரபல வியாபாரியுமாகிய தோழர் நா. பள்ளிகொண்டான் அவர்கள் 7—2—49ல் போர்ட் சுவீட்டன்ஹாமிலிருந்து, ரசூலாக் கப்பலில் புறப்பட்டு திராவிட நாட்டுக்கு அன்னாரின் சொந்த ஊராகிய (ராமநாதபுரம் ஜில்லா) திருப்பத்தூருக்கு நலமாக வந்து சேர்ந்துள்ளாரென அறிவிக்கப்படுகிறது.

—( )—

## வரப்பெற்றோம்.

சங்கீதப் புகழ் பாமாலை.

(4-ம் பாகம்.)

[ஆசிரியர் டி. எம். பீர்முகம்மது. விலை $1\frac{1}{2}$ அணா. வெளியிடுபவர் எம். எம். பீர்முகம்மது, ரவணசமுத்திரம்.]

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE.